10

# ஜனவரி 8-ல் ஸ்ரீலங்கா சோஷலிஸ குடியரசு!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 163
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 8 ஜமா. அவ் 19 வெள்ளிக்கிழமை [24-7-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18·00 | ரூ. 4·00 |
| 6 மாதம் | ரூ. 34·00 | ரூ. 7·50 |
| வருடம் | ரூ. 66·00 | ரூ. 14·00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## பண்டாரநாயக்கா பிறந்த தினத்தில் புதிய அத்தியாயம்

கோட்டை, வியா

1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி ஸ்ரீலங்கா சோஷலிச குடியரசு உருவாகிறது. குடியரசுக்கு வித்திட்ட காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் 72-வது பிறந்த தினமான ஜனவரி 8-ம் திகதி நாடு குடியரசாவது பொருத்தமான தொன்றாகும்.

சரித்திரப் பிரசித்திபெற்ற அன்றைய தினக் கொண்டாட்டங்கள் வெகு விமரிசையாக நடைபெற திட்டங்கள் தீட்டப்பெறுகின்றன. நீண்டகால அன்னியராட்சியின் பின் ஏற்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அன்றைய தினக் கொண்டாட்டங்களுக்கு பொதுநல நாட்டுத் தலைவர்கள், மண்டல சார்பற்ற நாடுகளின் தலைவர்கள் மற்றும் இலங்கையோடு ராஜதந்திரத் தொடர்புடைய நாட்டுத் தலைவர்கள் ஆகியோர் அழைக்கப்படுவர். இலங்கைக்கு ஜனவரி 8-ம் திகதியை உலகுள்ளளவும் ஞாபகத்தில் வைத்திருக்கத்தக்க வகையில் கொண்டாட்டங்கள் திட்டமிடப் படுகின்றன.

அரசியல் திட்டமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா அடுத்த புதன் கிழமை குடியரசு அரசியல் திட்டத்தை வகுப்பதற்கான செயல் முறைக்கு உடன்படுவதற்கு முதலாவது அரசியல் நிர்ணயசபை கூட்டத்தை கூட்டவிருக்கிறார்.

மேற்படி செயல்முறையை சபை ஏற்றுக் கொண்டு விட்டால் அமைச்சர் அரசியல் அமைப்புத் திட்டத்தில் இடம் பெறவேண்டிய அடிப்படைப் பிரச்சினைகளின் எண்ணிக்கை பற்றித் தீர்மானிப்பார்.

சபை அடிப்படை அம்சங்களில் உடன்பாடு தெரிவிக்காவிடில் அரசாங்கம் அரசியல் திட்டத்தை வகுப்பதில் இறங்கவியலாது என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்டநிர்ணய அமைச்சர் சபை முன் சமர்ப்பிக்கும் அடிப்படைப் பிரச்னைகளை அதற்குமுன்னர் மந்திரி சபையில் அங்கீகாரம் பெற்றே சமர்ப்பிப்பர்

இவைபற்றி விவாதிக்க அரசியல் நிர்ணயசபையில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு கட்சிகளுக்கும்பூரண வாய்ப்பு அளிக்கப்படும் திருத்தங்கள் கொண்டு வந்து அவைபற்றி விவாதிக்க ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் பூரணசுதந்திரமுண்டு

# மக்கள் கமிட்டிகள் ஆலோசனை கூறலாம்; உத்தரவிட முடியாது

## நீதிபரிபாலனத்தில் தலையிடவும் முடியாது

### மக்கள் கமிட்டி பற்றி வெள்ளை அறிக்கை விபரம்

கொழும்பு, வியாழன்

"மக்கள் கமிட்டிகள் எந்த விஷயத்தைப் பற்றியும் ஆலோசனை கூறலாமே தவிர தாமாகவே எந்த மாறுதலையும் செய்வதற்கு உத்தரவிடமுடியாது"

ம[illegible] கமிட்டிகள் சம்பந்தமாக பொதுநிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா இன்று வெளியிட்ட 'வெள்ளை அறிக்கை'யில் [illegible]

நியமிக்கப்படுவர்.

■ நீதிபரிபாலனத்[illegible] மக்கள் கமிட்டிகள் தலையிட முடியாது.

■ கூட்டுறவு மொத்த விற்பனவுநிலையம், கூட்டுறவுச்சங்கங்கள், தனியார் [illegible]

## கிளிநொச்சி - உருத்திரபுரம் பஸ் சேவைநடைபெறவில்லை

நல்லூர், வியாழன்

கிளிநொச்சி பஸ் டிப்போ ஊழியர்கள் கடமையாற்றுததால் கிளிநொச்சி உருத்திரபுரம் பஸ் சேவைநேற்று நடைபெறவில்லை பிரயாணி ஒருவர்கண்டக்டர் ஒருவரை தாக்கிய சம்பவத்தை தொடர்ந்தே ஊழியர்கள் வேலைசெய்யவில்லை யெனக் கூறப்படுகிறது.

கிளிநொச்சி உருத்திரபுரம் பஸ்ஸின் பிரயாணியொருவர் கண்டக்டரிடம் 10 ரூபா நோட்டைக் கொடுத்ததாகவும் கண்டக்டர் அதை வாங்க மறுத்தபோது மற்றொருபிரயாணி சில்லறை கொடுத்ததாகவும் இதன்பின் நோட்டு கொடுத்த பிராணிதிடீரென கண்டக்டரை தாக்கிய தாகவும் கூறப்படுகிறது.

தாக்கப்பட்ட கண்டக்டர் பஸ்ஸில் மயங்கிவிழுந்ததாகவும் பின்னர் பொலிஸில் இதுபற்றி புகார்செய்ததாகவும் கூறப்படுகிறது. பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் போது குறிப்பிட்ட பஸ்ஸுக்குகற்கள் வீசப்பட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பத்திரிநாத் வெள்ள பலி

## இந்திரா ரூ 20 ஆயிரம்

[illegible]

## 13-வதுபிரிவு மாற்றப்படும்

கொழும்பு, திங்கள்

அரசியல் அமைப்புச் சட்[illegible]

சிறுபான்மைத் தமிழர்களை

## "வசந்தமண்டபம் வரை அனுமதிக்க இணங்கவில்லை"

மாவிட்டபுரம், வியா.

'மாவைக்கந்தன் ஆலய வசந்தமண்டபம்வரை சிறுபான்மை மக்களை அனுமதிக்க மாவை ஆதீனகர்த்தா இணக்கம் தெரிவிக்கவில்லை என்று இன்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் பரிபாலகர் சார்பில் பிரதம குரு பிரம்மஸ்ரீ எஸ்.டி.சண்முகநாத குருக்கள் தெரிவித்துள்ளார்

வசந்தமண்டபம்வரைசிறுபான்மை மக்களை அனுமதிக்க மாவை ஆதீன கர்த்தா இணக்கம் என்றுகுறிப்பிட்டு ஒரு பத்திரிகையில் (ஈழநாடு அல்ல) வெளிவந்த செய்தியை மறுத்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது'

எப்போதாவது,எவருக்காவது மாவை ஆலய நிர்வாகிகள் திரு.மா. துரைராசாவிடம் வலிந்து பேசியதில்லை. திரு. துரைராசாதான் உதவி மந்திரியோடு வந்து எம்மிடம் ஆலயப்பிரவேசம் கதவடைப்பு போன்றவை குறித்து 'வலைகொண்டு பரிகாரம் தேட முயற்சித்தபோது அகிலஇலங்கைசைவ அனுட்டானசபை, வேதாகமசைவ சித்தாந்தசபை, வழிபடுவோர் சங்கம், தொண்டர் இயக்கம் ஆகியன கலந்து தமது ஆலோசனையைக் கூறின.

அப்போது திரு. துரைராசாதானுகவே வசந்தமண்டபம் வரையும் ஆலயப்பிரவேகக் காரரை அனுமதித்தால் நல்லது என உரைத்தார்' ஆலய நிர்வாகிகளோ அல்லது ஆதீனகர்த்தாவோ இதுபற்றிமுடிவு எதுவும்கூறவில்லை!

ஏதாவது பேச்சுவார்த்தை நடவடிக்கை ஏற்படுவதாயின் முதலில் கோவில்எல்லைகளுக்குள்ளிருந்து பொலிஸ் வெளியேறியபின் தான் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் அல்லது யாருடனும் பேச்சுவார்த்தைநடைபெறலாகாதுஎன ஆலயவழிபடுவோர் சங்கம் தீர்மானித்தபடியே செயலாற்றி வருகிறோம்.

## கடைசி சமரச

55 வயதடையும்

## ஆசிரியர்களுக்கு மேலும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டர் அதை வாங்க மறுத்த

பத்திரிநாத் வெள்ள பலி

## இந்திரா ரூ. 20 ஆயிரம் வழங்கினுர்

புதுடில்லி, ஜூலை 23

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பத்திரிநாத் யாத்திரீகர்களின் குடும்பங்களுக்கு பிரதமர் இந்திரா, பிரதம மந்திரி உதவி நிதியிலிருந்து 20,000 ரூபா வழங்கியுள்ளார். உப ராஷ்டிரபதி பதக், உத்தரப் பிரதேச முதலமைச்சருக்கு அப்பகுதியிலேற்பட்ட இப்பெரும் நாசத்திற்கு வருத்தம் தெரிவித்து அனுதாபச் செய்தி அனுப்பியுள்ளார்.

இமயமலை அடிவாரத்தில் உள்ள பத்திரிநாத் ஆலயத்துக்குச் சென்ற யாத்திரீகர்கள் தங்கள் யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்புகையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுப் பலர் உயிரிழந்தனர். அநேகர் கடும் பிரயத்தனத்தின் மூலம் மீட்கப்பட்டுள்ளனர்

(விபரம்: 3ம் பக்கம்)

## 13-வதுபிரிவு மாற்றப்படும்

கொழும்பு, திங்கள்

அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள 13-வது பிரிவை திருத்தி அமைக்கச் சட்டமூலம் தயாரிக்க படுகிறது

ஆட்சிமன்ற உறுப்பினர்களோ அல்லது செனட்டர்களோ இப்போதைய சட்டத்தின்கீழ்குற்றப்பட்டால் தங்களது பதவியை இழக்க நேரிடும் என்றிருப்பதை மாற்றிஅமைப்பதற்காகவே அரசாங்கம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது

# 'புதிய உணர்வை ஏற்படுத்திய அரசியல் நிர்ணயசபை கூட்டம்'

## சாவகச்சேரி எம். பி. கூறுகிறுர்

மட்டுவில், வியாழன்

'கடந்த 19-ம் திகதி நடைபெற்ற அரசியல் நிர்ணய அங்குரார்ப்பண விழா நமக்கு ஒரு புதிய உணர்வை உண்டாக்கியது.'

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற தென்மராட்சி பலநோக்கு சங்கங்களின் சமாஜத்தில்நடைபெற்ற கூட்டுறவு தினத்தின் 75-வது ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் கூறினுர். திரு எஸ். கே. திரவியநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

கடந்த 19-ம் திகதி இந்த நாட்டின் சரித்திரத்திலேயே இடம்பெறக் கூடிய விதத்தில் அமைந்திருந்த சட்டநிர்ணய சபை அங்குரார்ப்பண விழாவில் கலந்து கொண்ட எவருக்கும் அரசியல் அடிப்படைத் தத்துவங்களை உணர்த்தக் கூடிய வகையில் அந்த விழா இடம்பெற்றதைத் தொடர்ந்து அனைவருக்குமே புத்துணர்வை உண்டாக்கியுள்ளது. இந்த நாட்டின் அரசியலில் முதுகெலும்பாக உள்ள மக்களுக்கு முதல் வரிசையில் இடம் கொடுத்துள்ளதும், முக்கியமான இரு மொழிகளுக்கு மட்டும் இடம் கொடுக்கப் பட்டிருந்ததும், ஒரு தத்துவரீதியான அமைப்பாகும் என்று கூறிய திரு. வி. என். தொடர்ந்து பேசுகையில் இன்று நான் சாவகச்சேரி தொகுதி மக்களினது சார்பில் சட்டநிர்ணய சபையில் பல அம்சங்களை எடுத்துரைக்க வேண்டியவனுக இருக்கிறேன். இதில் எனது தொகுதி மக்களினது கருத்தை சரியானபடி எடுத்துரைக்க வேண்டியது தான் எனது அரசியல் தர்மமாகும் எனவே இப்படியான எனது தொகுதி மக்களினது கருத்தை நான் நன்கு அலசி ஆராய வேண்டியது அவசியம் இதற்கு என்னுடன் மககள் முன்னையவிட அதிகமாக நெருங்கிப் பழகவேண்டும்.

இந்த நாட்டிலே உள்ள சிறுபான்மை இனத்தினுடைய பாதுகாப்பிற்கு ஏற்ற அரசியல் அமைப்புகளை பற்றி ஆராய வேண்டியது இன்றைய இந்நாட்டு சிறுபான்மை மக்களது முக்கிய அம்சமாகும். இது பற்றி ஆராய வேண்டியதும் சகல பொதுமக்களினதும் முக்கிய கடமையாகும்.

இந்த நாட்டிலே சிறுபான்மை மக்கள் பூரண பாதுகாப்புடன் வாழ்வதற்கான அரசியல் அமைப்பு சமஷ்டி ஆட்சி அமைப்பு ஒன்றுதான் என்று நானும் எமது கட்சியும் கூறலாம், ஆனுல் சமஷ்டி ஆட்சி அமைப்புப் பற்றி ஆராயவேண்டியது எமது மக்களின் முக்கிய கடமையாகும் இதற்கு மக்கள் ஆங்காங்கே கருத்தரங்குகள் வைத்து விவாதிப்பதன் மூலமே தெளிவுபெறமுடியும்.

என்னைப் பொறுத்தவரையில் நான் உங்கள் பிரதிநிதி என்றமுறையில் நான் எவருடைய கருத்தை ஏற்றுக்கொள்வது? ஒருவர் கூறுவார்: தமது பணம் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து அனுபவிப்பதற்கான பாதுகாப்பு வேண்டும் என்பார்; ஒருவர் கூறுவார், ஒவ்வொரு நபரும் தான் சம்பாதித்த பணம் தன்னுடனேயே முடிவுபெற வேண்டுமென்பார். இதில் எவருடைய கருத்தை நான் ஏற்று கொள்வது?

இப்படியான கருத்தரங்குகளை நான் நடத்தினுல், அது கட்சிரீதியானது என்று ஒருசாரார்கலந்துகொள்ளாமல் இருக்கக்கூடும். எனவே இப்பொறுப்பையும் திரு. திரவியநாயகம் பொறுப்பேற்று யூனியன் சார்பில் இக்கருத்தரங்கை நடாத்துவது மிகவும் சிறந்தது'' என்ருர்.

மேலும் கூட்டுறவு மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு இ. இராசரத்தினம், உதவி ஆணையாளர் திரு. வி. கனகசபை உட்படப் பலர் உரை நிகழ்த்தினர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. ......

### கைதானோர்கள்

சென்னை ஜூலை 23

கடந்த சில மாதங்களாக இலங்கையில் கள்ளத்தனமாக குடியேறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை முறியடிக்க சென்னை பொலிசார் நடத்திய எட்டு சோதனைகளில் எட்டு தரகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

மக்கள் கமிட்டிகள் சம்பந்தமாக பொதுநிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா இன்று வெளியிட்ட 'வெள்ளை அறிக்கை'யில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் கமிட்டிகள் எப்படி அமைக்கப்படவேண்டும்; அவைகளின் கடமைகள் என்ன என்பது பற்றி இந்த வெள்ளை அறிக்கையில் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது

வெள்ளையறிக்கையின் சில அம்சங்கள் வருமாறு:-

■ மக்கள் கமிட்டிகள் அமைக்கப்படும் பகுதிகளிலுள்ள ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் அந்தக் கமிட்டிகளில் உத்தியோகப்பற்றற்ற அதிகாரிகளாகவே கடமையாற்றுவர்' மக்கள் கமிட்டியில் 11 பேர் அங்கம்வகிப்பர்.

■ மக்கள் கமிட்டிகளின் தலைவரை அமைச்சரே நியமிப்பார்

■ கமிட்டியின் காரியதரிசியை அந்தந்தக் கமிட்டிகளே தெரிவு செய்யும்.

■ மக்கள் கமிட்டிகளின் தலைவரும் காரியதரிசியும் சமாதான நீதிபதிகளாக நியமிக்கப்படுவர்.

■ நீதிபரிபாலனத்தில் மக்கள் கமிட்டிகள் தலையிட முடியாது.

■ கூட்டுறவு மொத்த விற்பனவுநிலையம், கூட்டுறவுச்சங்கங்கள், தனியார் துறை ஆகியவைகளுக்குச் சென்று அங்கு நிலவும் மோசடி, ஊழல்பற்றி அரசாங்கத்துக்குத் தெரிவித்து தகுந்த யோசனைகளைத் தெரிவிக்கலாம்.

■ 750 முதல் 2500 வரை மக்கள் வாழும் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு மக்கள் கமிட்டி நியமிக்கப்படும்.

■ மக்கள் கமிட்டி சம்பந்தப்பட்ட திணைக்களம்ஒன்று அமைக்கப்படும்.

அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் பற்றியும் கையிருப்புகள் பற்றியும் மக்கள் கமிட்டிகள் ஆராய்ந்து அறிக்கைகள் சமர்ப்பிக்கலாம்

மக்கள் கமிட்டிகள் மூலம் நிர்வாகத்துறையில் பொது மக்களுக்கு நேரடித் தொடர்பு ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-ம்பக்கம்பார்க்க)

## மாணவர் உடைகள் சலுசலவில் கிடைக்கும்

கொழும்பு, வியாழன்

பாடசாலைப் பிள்ளைகளுக்கான உடைகளை லங்கா சலுசலா குறைந்த விலைக்கு விற்பனை செய்யவிருக்கிறது. இத் தகவலை சலுசல ஸ்தாபனத்தலைவர் திரு டக்ளஸ் பெரேரா தெரிவித்தார். மாணவர்களுக்கான உடைகளை சலுசல ஸ்தாபனம் தயாரிப்பதன்மூலம் தமது பிள்ளைகளின் செலவு சம்பந்தமான பளு பெற்ருேருக்கு குறையுமென அவர் தெரிவித்தார். இத் திட்டத்தின் முதற்படியாக சுமார் 70 லட்சம் நீலடிரில் அரைக்காற்சட்டைகளைத் தயாரித்து விற்பனைக்கு விட லங்கா சலுசல தீர்மானித்துள்ளதாம். ஒவ்வொரு காற்சட்டையும் 6 ரூபா 25 சதத்திற்கு விற்கப்படலாமெனத் தெரிய வருகிறது

பெண் பிள்ளைகளுக்கான உடைகளையும் மற்றும்மாணவர்களுக்கான காற்சட்டை மற்றும் சேட் வகைகளையும் சலுசல ஸ்தாபனம் தயாரிக்குமாம். (சி. பி. ஏ)

# பின் அர்மையாருக்கு வரவேற்பு ஏற்பாடு

கொழும்பு, வியாழன்

இலங்கைக்கு விஜயம் செய்யும் தென் வியட்னுமின் புரட்சி அரசின் வெளிநாட்டு மந்திரியான திருமதி நியன் தி பின்னுக்குஇம் மாதம் 26-ம் திகதி கட்டுநாயகா விமானநிலையத்தில் வரவேற்பளிக்க இலங்கை வியட்னும் நட்புறவுச் சங்கம் ஆயத்தங்கள் செய்து வருகிறது

கம்யூனிஸ்ட் கட்சி இளைஞர் முன்னணிகளுக்கு விடுத்த அழைப்பில் எல்லா உறுப்பினர்களையும் கட்டுநாயகா விமான நிலையத்தில் 26-ம் திகதி பிற்பகல் 2-30 மணிக்கு பிரசன்னமாயிருக்குமாறு கலவான எம். பி. திரு. சரத்முத்தட்டுகம கேட்டுக் கொண்டுள்ளார்.

வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமனையும் மற்றும்பல அமைச்சர்களையும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களையும் திருமதி பின் சந்தித்துப்பேசுவார். [சி பி ஏ]

தியை மறுத்து வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில்

கூறின.

அப்போது திரு. துரை

த்தபடியே செயலாற்றி வருகிறேம்.

## கடைசி சமரச முயற்சியும் தோல்வி

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் பிரச்னை சம்பந்தமாகக்கடைசி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும்கூடப் பயனளிக்கவில்லையென அறியப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வடபகுதிப் பிரமுகர்கள் மேற்கொண்ட முயற்சியும்கூட கைகூடவில்லையென்றும் தெரிய வருகிறது. சமரச முயற்சிகளைக் கைவிட்டுவேறு முயற்சிகளைத்தான் இனிக்கைக்கொள்ளவேண்டுமென்று சுதந்திரக்கட்சிப் பிரமுகர்களே கருத்துத்தெரிவித்துள்ளார்களாம்.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம் வெள்ளி

ஐக்கிய முன்னணியின் கீழ் தமிழரின் நிலைமை என்னும் பொருள் பற்றி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இம் மாதம் 26-ம் தேதி மாலை திரு. வி. காராளசிங்கம் சொற் பொழிவாற்றுவார்.

55 வயதடையும்

## ஆசிரியர்களுக்கு மேலும் சந்தர்ப்பம்

கோட்டை, வியாழன்

இவ் வருடம் 55 வயதையடையும் ஆசிரியர்கள் மேலும் ஓர் ஆண்டு சேவையில் நீடிக்க அனுமதிக்கப்படுவார்கள்,

ஏற்கனவே 55 வயதையடைந்திருக்கிறவர்களும் சேவை நீடிப்பு பெற்றவர்களும் தொடர்ந்து சேவையில் நீடிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிகின்றது. இது பற்றிய சுற்று நிருபங்களை மாவட்ட கல்விக் காரியாலயங்களுக்கு கல்வி அமைச்சு அனுப்பியிருக்கின்றது

பத்திரிநாத் பரிதாபம்!

## இறந்தவர்கள் தொகை என்ன?

புதுடில்லி, ஜூலை22

பத்திரிநாத் ஆலயத்துக்கு செல்லும் வழியில் வெள்ளப் பெருக்கில் மரணமானவர்களின் தொகை60 பேர்வரை தான் இருக்கும் என்றும் முதலில் வந்த செய்திகள் மிகைப்படுத்திக் கூறப்பட்டவை என்றும் கூறப்படுகிறது. சுமார் 600 பேர் வரை மரணமாகியிருக்கலாம் என்று முதலில் வந்த செய்திகள் கூறின.

.........

## பிரிவிக்கவுன்ஸில் வழக்குகள் நிலைஎன்ன

கொழும்பு, வியாழன்

அடுத்த ஆண்டு ஜனவரியில் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வருவதால் பிரிவிக்கவுன்சில் வழக்குகள் நிலை என்ன என்பது, சட்ட வல்லுனர்களுக்கு பெரும் கேள்வியாக அமைந்துள்ளது.

33 வழக்குகள் இப்போது பிரிவிக்கவுன்சிலிலுள்ளன. சில வழக்குகள் முடியும் தறுவாயிலும், சில வழக்குகள் விசாரணையிலும் உள்ளன. இவற்றில் 25 சிவில் வழக்குகள், 8 அரசுக்கு எதிரான வழக்குகள்.

பரீட்சைப்பகுதி ஊழல்

# மக்கள் சாட்சியம் கோரப்படுகின்றது

கொழும்பு, வியாழன்

பரீட்சைப்பகுதி ஊழல் முறைகேடுகள் நிதிவிரையம் ஆகியவைபற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட செயற்குழு இன்று அதன் முதலாவது கூட்டத்தை நடத்தியது.

பொதுமக்களிடமிருந்து முதலில் சாட்சியங்களை எழுத்துமூலம் கோருவதென்றும் பின்னர் நேரடியாக அவர்களை அழைத்து விசாரிப்பதென்றும் குழு முடிவு செய்தது.

பரீட்சைப் பகுதியின் பொது நிர்வாகம் பற்றியும் நிதி மற்றும் பரீட்சைகள் சம்பந்தமான முறைப்பாடுகளைப் பற்றிய சாட்சியங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1968-ம்ஆண்டில் நடைபெற்ற ஜி. சி. ஈ சாதாரணம் சம்பந்தமானகேள்வித்தாள்கள வெளியானவிசயம் குறித்தும் குழு சாட்சியங்களை எதிர்பார்க்கின்றது.

பொதுமக்களிடமிருந்து எழுத்து மூலமானசாட்சியங்கள் கொழும்பு மலாய் வீதியிலுள்ள பரீட்சைப்பகுதி விசாரணைக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மறுபரிசீலனை

கொழும்பு, வியா

வெளிநாடுகளில்கல்வி பயில விரும்பும் 300பேர்களின் அந்நிய செலாவணிக்கான விண்ணப்பங்கள், கல்வி அமைச்சினுல் மறுபரிசீலனை செய்யப்பட்டுவருகிறது.

இவ்விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்காக நிரந்தரகாரியதரிசி தலைமையில்கல்வி அமைச்சுதனியாக ஒரு குழுவை நியமித்துள்ளது

## இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நவரத்தினராஜா ஆய்வுகூட நிதிக்காக இக்கல்லூரியினர் நடனநாட்டிய விழாவொன்றை நடாத்துகின்றனர் இவ்விழா இன்று மாணவர்களுக்கும் நாளை பொதுமக்களுக்கும் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வகுப்புகள்

பார்மசிஸ்ற் பரீட்சைக்கு (External Pharmacist Examination Course) வகுப்புகள். சங்கரப்பிள்ளை கட்டடம், 2-வது மாடி. விபரங்களுக்கு: பரணி பார்மஸி, யாழ்ப்பாணம். 3003.

### தேவை

யாழ்ப்பாணம் கே. கே எஸ். வீதி மைலண்ட்ஸ் மேல்மாடியிலுள்ள நெசவு ஆலை (புதிய நிர்வாகத்தின் கீழ் இயங்கும்) மாலினி இன்டஸ்றீஸுக்கு அனுபவமுள்ள நெசவாளர்கள் தேவை. காலை 10- மாலை 3 மணிக்கிடையில் நேரில் வந்து சந்திக்கவும் 3002

யாழ்ப்பாணத்தில் வீடு, காணி, வயல்கள் தேவை பணம் உடனே கொடுப்போம். எழுதுங்கள் வெஸ்டன் றேட்ஸ், தபால் பெட்டி-54, யாழ்ப்பாணம். 3011

### விற்பனைக்கு

யாழ்ப்பாண புகையிரத ஸ்தானத்திற்கு எதிரில் இரண்டு பரப்பு வெற்று நிலம், லான்ட் இன்வெஸ்ற்மென்ட், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 3004

2 ஸ்ரீ ரைகர் கப்பும் (Tiger Cub) E L B S. A பான்ரமும் (Bantom) விற்பனைக்கு உண்டு. 74 பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்: 3010

நல்ல நிலைமையில் உள்ள அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கலைமகள் அச்சகம், கண்டி வீதி, சாவகச்சேரி. 3012

## சென். ஜேம்ஸ் ச. ச. நிலைய விளையாட்டு போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, வியா.

ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் சமுகநிலைய பதினுன்காவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, மேற்படி சன சமூக நிலையங்களிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின் சில முடிவுகள் வருமாறு:

100 மீட்டர் ஓட்டப் போட்டி மேற்பிரிவு: சூ தாசன், ஜே. அன்ரன், ந தெய்வேந்திரன் மத்திய பிரிவு: ச. றெய்மண்ட், ஜெ சந்திரன், சூ. வின்சன். கீழ்ப்பிரிவு: பா. ஜெருட். ம. ஜோன்சன், அ. ப. தொவில்லியம்.

200 மீட்டர் ஓட்டம்- மேற்பிரிவு- சூ, தாசன், ஜே: அன்ரன், ந தெய்வேந்திரன், மத்தியபிரிவு: ச. றெய்மன்ட், சூ வின்சன், அ. ப. பாலேந்திரன்.

75 மீற்றர் ஓட்டம்- கீழ்ப்பிரிவு: பா. ஜெருட். ம. ஜோன்சன், செ. யூட்ஸ்.

### கல்வி

G. C. E (O/L) ஆங்கில பாட வகுப்புக்கள் கிழமையில் 3 நாட்களும் விடுதலை நாட்களில் விசேட வகுப்புக்களும் ஆங்கில பாட போதனையில் விசேஷ திறமையும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியரால் நடாத்தப்படும். குறிப்பிட்ட தொகையினருக்கே இடமுண்டு. விபரங்கட்கு 30-7-70ன் முன் நேரில் சந்திக்கவும். க. சர்வேஸ்வரன், கோண்டாவில் கிழக்கு (பலாலி றோட் சந்திக்குச் சமீபம்) கோண்டாவில். 3013

## அறிவித்தல்

1970ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி காலை 10-00 மணி வரையும் தெல்லிப்பளைக் கிராமசபைத் தலைவரால் கீழ்க்காட்டப்படும் வேலைக்கு சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால்மூலம் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் ரூபா 25/- கட்டுப்பணமாகவும், ரூபா 10/- கிரயமாகவும் கட்டியதின் பேரில் 6-8-70-ம் திகதி மாலை 3 மணி வரையும் வழங்கப்படும் பத்திரத்தில் நிரப்பப்படவேண்டும். மேலதிக விபரங்கள் தெல்லிப்பளைக் கிராமசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

வேலையின் விபரம்

1. தெல்லிப்பளைக் கிராமசபைக் கட்டடம் திருத்தமும், விஸ்தரிப்பும்.

ம. சிதம்பரநாதன்,
தலைவர்,
கிராமசபை,
தெல்லிப்பளை.

கிராமசபை அலுவலகம்,
தெல்லிப்பளை,
22-7-1970. 2377

## டீசல் லொறி விற்பனைக்கு

எமது 22 சிறி 4307 கொமர் லொறி விற்பனைக்குண்டு. இது ரூபா 15,000/- செலவில் முற்றாக ஏஜண்டுகளால் தற்போது திருத்தி பெயின்ற் செய்யப்பட்டுள்ளது. செலவு விபரச் சிட்டைகளும் லொறியும் யாழ்ப்பாணம் "டிரேட் அன்ட் ரான்ஸ்போட் கம்பனியில்" பார்வையிடலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் சீல் செய்யப்பட்ட கடித உறைகளில் "லொறி ரென்டர்" எனக் குறித்து 5-8-70 பகல் 12-00 மணிக்கு முன் எமக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரம் ரூபா 100/- செலுத்தி எமது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதென்று அறிவித்த திகதியிலிருந்து ஏழு நாட்களுள் முழுக் கிரயத்தையும் செலுத்தி விண்ணப்பகாரன் லொறியைப் பாரமெடுத்தல் வேண்டும்.

அ. சிவசுந்தரம்,
தலைவர்.

க. மயில்வாகனம்.
நிர்வாக காரியதரிசி

தென் யாழ்ப்பாணம் ப நோ: கூ. ச. சமாசம்,
2376 கிளிநொச்சி.

## 'உயரிய பண்புகளை விளையாட்டு திடலில் கற்கலாம்'

— கல்வி அதிகாரி

யாழ்ப்பாணம், வெள்ளி

"விளையாட்டுத்துறையில் மாணவர்கள் கவனம் செலுத்தினுல், படிப்பில் கோட்டை விட்டு விடுவார்கள் என நினைக்கும் சில பெற்றோர்களின் எண்ணம் மிகவும் தப்பானது. வகுப்பறையில் கற்கமுடியாத பல உயரிய குணங்களை, ஒரு மாணவன் விளையாட்டு மைதானத்தில் கற்றுக் கொள்ள முடியும். மூளை வளர்ச்சி அடைவதற்கு உடலில் வலிமையிருக்க வேண்டும், உடல் வலிமை பெறுவதற்கு மாணவருக்கு விளையாட்டு மிகவும் அவசியம்"

இவ்வாறு யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கல்வி அதிகாரி திருமதி ஆர் எஸ். பாமர் கூறினுர் இந்த விளையாட்டுப் போட்டியில், 'பொஞ்சின்' இல்லம் முதலாவது இடத்தையும், 'டன்' இல்லம் இரண்டாவது இடத்தையும், 'ஏபரகாம்' இல்லம் மூன்ருவது இடத்தையும், 'மத்தீயூஸ்' இல்லம் நாலாவது இடத்தையும் பெற்றன

ஏ. எஸ். தர்மசீலன், ஜே. ஏ பத்மராசா, ஈ. எதிர்மனசிங்கி, லூக் சூசைப்பிள்ளை. பி. வசந்தகுமார், டி திசவீரசிங்கம் ஆகியோர் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட அஞ்சல் ஓட்டப் போட்டியில், கிளிநொச்சி விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் புனிதவளன் விளையாட்டுக் கழகம், அரியாலை விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றி பெற்றன.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு திருமதி பாமர் பரிசில்களை வழங்கினுர்.

(தே. நி

## "ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கும் இடம் விளையாட்டு மைதானம்"

— வி. என்.

யாழ்ப்பாணம், வெள்ளி

"விளையாட்டிடமே வாழ்க்கையில் பெரிய வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்கும் இடமாகும். விளையாட்டு மாணவர்களிடையே ஒழுங்கு, கட்டுப்பாடு, தலைவருக்கமைதல், வெற்றியையும் தோல்வியையும் சமமாக நோக்கும் தன்மை என்பவற்றைத் தருகிறது. பிற்காலத்தில் இவ்விளையாட்டு வீரர்கள் அரசியல் முதலிய பல்வேறு துறைகளில் வெற்றி தோல்விகளுக்காக ஒரு சமூகத்தைப் பிரிக்க முற்படமாட்டார்கள்."

இவ்வாறு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டிக்கு தலைமை வகித்த, சாவகச்சேரி எம் பி திரு. வி. என். நவரத்தினம் கூறினுர்.

இந்த விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட. வடமாநிலக் கல்வி அதிபதி திரு வே. சங்கரலிங்கம் தமது உரையில், நகரப் புறப் பாடசாலைகள் பெறும் வசதிகள் யாவும், கிராமப் புறப் பாடசாலைகளும் பெற வேண்டுமெனவும், இவ் வித விழாக்கள் நகரங்களைப் போன்று கிராமங்களிலும் சிறப்பாக நடைபெறுவதை

வது இடத்தையும், 'இளங்கோ' இல்லம் மூன்ருவது இடத்தையும் பெற்றன.

வே. மஞேகரன், சி. சற்குணநாதன், எஸ், பவளராணி, என். புவனேஸ்வரி, கே. சாந்தகுமாரி ஆகியோர் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

விளையாட்டுப போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு, வட்டார வித்தியாதிகாரி திரு எஸ். கந்தசாமி பரிசில்களை வழங்கினுர்.

துன்னலை தெற்கில்

## வீடமைப்புத் திட்டம் உருவாகும்

உடுப்பிட்டி, வியாழன்

துன்னலை தெற்குச் சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கு வீடமைப்புத்திட்டமொன்று உருவாகவிருப்பதாகத் தெரிகிறது. அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படும் துன்னலை தெற்கு ஆட்டுப் பட்டிக்காணிக்குள் இத்திட்டம் அமையுமெனநம்பிக்கையாகத்தெரிகிறது

## முதலிடத்தைப் பெற்றுர்

## வடக்கில் 'சோஷலிஸக் கல்வி வட்டம்' உதயம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியிலுள்ள கல்விமான்கள் ஒன்றுகூடி சோஷலிசக் கல்வி வட்டமொன்றை உருவாக்கியுள்ளார்கள் சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னுள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் (ஓறேற்றர்) தலைமையில் இவ் அங்குரார்ப்பணம் நடந்தது. மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இக்கூட்டம் நடைபெற்றது:

இக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் திரு. சி. சுப்பிரமணியம் கூறியதாவது:

கல்விவட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததொன்ருகும். குறிப்பாக இளைஞர்கள் நாட்டில் இன்று தலைதூக்கி நிற்கும் முக்கிய பிரச்னைகள் பற்றி அறியவும் அதற்கு பரிகாரங்கள் தேடவும் இத்தகைய கல்விவட்டம் பேருதவியாக இருக்கும். சோஷலிஸ கல்விவட்டம் என்று கூருது கல்விவட்டம் என்ற பெயரே வைக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் இவ்வட்டம் சோஷலிசவாதிகளல்லாதவர்களது கவனத்தையும் ஈர்ந்து பெரியதொரு கல்வி வட்டமாக அமையும், அத்துடன் மற்றக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் இதில் அங்கத்துவம் வகிக்க வாய்ப்பேற்படும்.

தற்போது சந்தர்ப்பத்தையொட்டி சோஷலிச கட்சிகளின் கிளைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அத்தகையதொரு சந்தர்ப்பவாத உணர்ச்சி எமது வட்டத்துக்கு இருக்கக்கூடாது.

இக்கூட்டத்தில் கல்விவட்டம் பெயர்பற்றி டாக்டர் எஸ். ரகுநாதன், திருவாளர்கள் வைரமுத்து. எஸ். சிவக்கொழுந்து எஸ். மாணிக்கநடராஜா. கே முத்துவேற்பிள்ளை, எம். பெருமைஞர், கே, கதிர்காமநாதன் ஆகியோர் கலந்தாலோசித்தனர். இறுதியில் 'சோஷலிச கல்விவட்டம்' எனப் பெயரிடுவது எனத் தீர்மானித்தனர். ஒரு உ'' குழுவொன்றும் நியமிக்கப் பட்டது.

சோஷலிசம் பற்றிப் படிப்பதிலும் அதைப் பிரச்சாரம் செய்வதிலும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறேம்.

நானும் இன்னும் சிலரும் 1932-ம் ஆண்டிலிருந்தே இந்நாட்டில் சோஷலிசத்தைப்போதித்துவருகிறேம் நாம் உருவாக்கி வளர்க்கும் சோஷலிஸ்ட் கல்வி வட்டத்தில் இருந்து எதிர்வரும் தேர்தலில் உடுவில் தொகுதியில் போட்டியிட அங்கத்தவரை அனுப்பவேண்டும் இக்கனவு நனவாகும்வரை நான் உயிருடன் இருப்பேன் என நம்புகிறேன் என திரு சி. சுப்பிரமணியம் கூட்ட முடிவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

உடுப்பிட்டி, வியாழன்

"தொழிலாளர்கள் தமது முன்னேற்றத்திற்குக் கேட்

## 'பள்ளிகளனைத்தும் தொழில் நுட்பக்கூடமாகவேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

"வடக்கிலுள்ள இளைஞர்கள், மாவட்டம் முழுவதிலும் ஸ்ரீலங்கா, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிக் கிளைகளை ஆர்வத்துடன் ஆரம்பிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இடதுசாரிகளுக்கு எதிரானவர்கள்கூட இந்தக் கிளைகளில் சேர்கிறுர்கள். வேலை தேடும் நோக்கத்திற்கு இது உதவியாக இருக்கும் என்பதனுலேயே அவர்கள் இக்கிளைகளில் சேர்கிறுர்கள் இது, வேலையற்ற இளைஞர்கள் பரந்து செறிந்திருப்பதும், அதனுல் அவர்கள் அதிருப்தி அடைந்திருப்பதுமே காரணமாகும்."

இவ்வாறு முன்னுள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் யாழ்ப்பாணக் கனிஷ்ட தொழில்நுட்பக்கல்லூரியின் பதினெராவது வருடாந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. சி. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில், தாம் இந்நாட்டின் கல்விமந்திரியாக இருந்தால், நாட்டின் சகல பாடசாலைகளையும், தொழில் நுட்ப நிலையங்களாக மாற்றியிருப்பாரென்றும், பாடசாலைகள் மாணவர்களது வாழ்க்கைக்கு எவ்விதத்திலும் இப்போது உதவாத ஒன்ருக இருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

பாடசாலைக் கல்வியினுல் எவ்வித பயனுமில்லை என்பதற்கு திரு. சி. சுப்பிரமணியம் ஓர் உதாரணத்தைக் காட்டினுர்.

"ஒரு பாடசாலையிலிருந்து 300 பேர் ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றினுர்கள். 20 பேர் மட்டும் பல்கலைக்கழகத் தேர்வுக்குச் சித்திபெற்றுர்கள். மற்றவர்கள் கதியென்ன? இதனுல் தான் கனிஷ்ட பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் எல்லாம் தொழில் நுட்ப

வடபகுதிக் கல்வியதிபதி திரு. சங்கரலிங்கம், டாக்டர் கே. மகாதேவா, திரு. நாகலிங்கம் ஆகியோரும் பேசினர்.

திரு. எஸ், எஸ், டி ஜெயசிங்கம் தலைமைவகித்தார்.

## மேலதிக சேவை வேண்டும்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி புகையிரத சேவை அப்பகுதிமக்களுக்கு பூரணதிருப்தியையளிக்கவில்லையாதலால் மேலதிக புகையிரத சேவை ஒன்றை கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கும் காங்கேசன் துறையிலிருந்து கொழும்பிற்கும் ஏற்படுத்த வேண்டுமென்று சுண்டிகுளி சமசமாஜக்கட்சி வாலிப முன்னணியின் ஏகமனதான தீர்மானத்தை திரு. ஏ. விஸ்வநதன் போக்குவரத்தமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனுவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இத்துடன்மேற்படிவாலிப முன்னணி வடக்கில் உள்ள பாடசாலைகளில் இரண்டாவதுபாடமாக சிங்களத்தைப் போதிப்பதற்கு கல்வியமைச்சர் சிங்கள ஆசிரியர்களை நியமிக்கவேண்டுமென்ற மற்றெரு தீர்மானத்தையும் கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் முகமத்துக்கு திரு. விஸ்வநாதன் அனுப்பிவைத்துள்ளார்.

## சூடானுக்கு 150 லட்சம் ருத்தல் தேயிலை

கோட்டை, வியா

ஆபிரிக்காக் கண்டத்தின் மிகப்பெரிய நாடான சூடான் இலங்கையிலிருந்து 150 லட்சம் ருத்தல் தேயிலையை வாங்குவதற்கு முன்வந்துள்ளது.

மேற்படி தேயிலையை

25-7-70 முதல்
வெஸ்லி சினிமா மானிப்பாய்
சத்தியன், ஷீலா, மது நடித்த
செம்மீன்
(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

ராஜா (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்!
காந்தராவ்; ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி நடித்த
தினசரி 3 காட்சிகள்
மாவீரன் ஜெயசீலன்

ராணி
ஜெமினி — சௌகார்ஜானகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரன் ஜெயசீலன்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி
நடித்த
## இரு கோடுகள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவ ஜிகணேசன் இரு வேடங்களில்
பத்மினி - ராகினி - தங்கவேலு
நடித்த
## உத்தம புத்திரன்
(புதிய கொப்பி)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை
வெலிங்டன் யாழ்ப்பாணம்
திரைகளில்
தினசரி பி ப 3-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'
# துணைவன்
கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


தலைவர்.
க. மயில்வாகனம்.
நிர்வாக காரியதரிசி
தென் யாழ்ப்பாணம் ப நோ: கூ. ச. சமாசம்,
2376 கிளிநொச்சி.

## முதலிடம்

பண்டத்தரிப்பு, வியா
காங்கேசன்துறை வட்டாரப் பாடசாலைகளிடையே நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் மனுநீதி கண்ட சோழன் என்ற நாடகத்தை நடித்து இளவாலை மகா வித்தியாலயத்தினர் முதலாவது இடத்தைப் பெற்றனர்.

தொடர்ந்து நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியிலும் மேற்படி மகாவித்தியாலயமும் மகாஜனக் கல்லூரியும் கூட்டாக முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டன. இரண்டாவது இடத்தை இளவாலை என்றியரசர் கல்லூரியினரும் பெற்றுக் கொண்டனர்.

## நாடகப்போட்டி

பண்டத்தரிப்பு. வியா
கூட்டுறவு தினத்தையொட்டிய மாவட்ட ரீதியிலான நாடகப்போட்டி 26-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.


வெலிஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
ஸ்ரீசங்கர்-ஹெலன்குமாரி
நடித்த
மஞ்சள் குங்குமம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30,9-30மணி
போயா, பிரிபோயா 2-30
சிவாஜி-ஜெயலலிதா
நடித்த
கலாட்டா கல்யாணம்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p m
Poya-Prepoya 10-30 a.m
Christopher Lee
in
RASPUTIN
THE MAD MONK
(Scope- Color)

REGAL JAFFNA
Daily 4 Shows
Neil Connery,
Daniela Bianchi
in
OPERATION KID
BROTHER
(Adults only)


தமது உரையில், நகரப்புறப் பாடசாலைகள் பெறும் வ[illegible]கள் யாவும், கிராமப் புறப் பாடசாலைகளும் பெற வேண்டுமெனவும், இவ்வித விழாக்கள் நகரங்கள் போன்று கிராமங்களிலும் சிறப்பாக நடைபெறுவதை இவ்வித்தியாலய விழாவிலிருந்து காணக்கூடியதாக அமைந்துள்ளதெனவும் கூறினார்.

விளையாட்டுப் போட்டியில் 'கம்பன்' இல்லம் முதலாவது இடத்தையும், 'பாரதி' இல்லம் இரண்டா

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம், திங்கள்
கீரிமலைத் தமிழரசு வாலிப முன்னணி வருடாந்தக்கூட்டம் தலைவர்செல்வன் கனக. மகேந்திரா தலைமையில் நடந்தபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. சிவலிங்கம், உபதலைவர்கள்: திரு. சி. காமாட்சிசுந்தரம், திரு. க. இராசேந்திரம், திரு. க. செல்லன், செயலாளர்: திரு. சு. யோகநாதன், உபசெயலாளர்கள்: திரு. பா. சற்குணம், திரு க பாலேந்திரா, பொருளாளர்: திரு. பா. சேவியர், உபபொருளாளர்: மு. தம்பித்துரை.

திருவாளர்கள் வி. செல்வராசா, க. சண்முகநாதன், சி. செல்லன், மு. இராசேந்திரம், சி. சுந்தரலிங்கம் ஆகியோர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

0 0 0

ஊர்காவற்றுறை, விய.
யாழ்ப்பாணம் மாவட்ட கிராமசேவையாளர் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்ற போது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு எஸ் கபிரியேற்பிள்ளை, உபதலைவர் திரு எஸ் மகாலிங்கம், காரியதரிசி திரு ரி துரைசிங்கம், தனதிகாரி திரு எஸ். துரைராசா.

நிர்வாகசபை யொன்றும் அமைக்கப்பட்டது.

0 0 0

முசலி, வியாழன்
மன்னார் மாவட்ட கூட்டுறவு வங்கியின் புதிய நிர்வாகிகளாக கீழ்க்கண்டோர் தெரியப்பட்டனர். இந்தக் கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்கஅதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது

தலைவர் திரு. எஸ். கதிர்காமநாதன் உபதலைவர்: திரு. எம். சுப்பிரமணியம் செயலாளர்: திரு. எஸ்.எஸ். பிகிராடோ.

கமிட்டி அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

துன்னாலை தெற்கு அட்டுப்பட்டிக்காணி [illegible]குள் [illegible]திட்டம் அமையுமெனநம்பிக்கையாகத்தெரிகிறது

## முதலிடத்தைப் பெற்றார்

ஊர்காவற்றுறை, வியா.
தீவுப்பகுதிபல நோக்கு கூட்டுறவு சமாச வெள்ளி விழாவை யொட்டி நடைபெற்றவிளையாட்டுப் போட்டியின்போதுமரதன் ஓட்டத்திற்கான முதற்பரிசை செல்வன் எஸ். பிரான்சிஸ் பெற்றுக் கொண்டார்.

## அதிபராக நியமனம்

கொடிகாமம், வியாழன்
மிருசுவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திற்கு அதிபராகவிருந்த திரு. சிவப்பிரகாசம் வரணி மகாவித்தியாலயத்துக்கு மாற்றலாகிச் சென்ற வெற்றிடத்துக்கு, மானிப்பாய் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த திருமதி பி. சிவசங்கரம் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## கோரிக்கை

ஊர்காவற்றுறை, வியா.
சரவணை உபதபாற்கந்தோருக்கு 'தொலைபேசி' வசதி செய்து தரும்படி தீவுப்பகுதி எம். பி. யை சரவணை தமிழரசுவாலிப முன்னணியினர் கேட்டுள்ளனர்.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 24—7—70

(காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 குரல்வகை, 7-30 பண்ணுரிந்தமிழ், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-30 ஒடிவிளையாடு பாப்பா.

இரவு 6-00 இசைப்பயிற்சி, 6-30 மகளிர் அரங்கம், 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

சோஷலிசம் பற்றிப் படிப்பதிலும் அதைப் பிரச்சாரம் செய்வதிலும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

உடுப்பிட்டி, வியாழன்
''தொழிலாளர்கள் தமது முன்னேற்றத்திற்குக் கேட்கும் உதவிகளைச்செய்து கொடுக்க இன்றைய அரசாங்கம் தயாராகவுள்ளது'' என்று திரு. வே. பாலசிங்கம் வதிரி சமசமாஜ வாலிப முன்னணிக்கூட்டத்தில் பேசுயில் குறிப்பிட்டார்

இக்கூட்டம் திரு. வே. கதிர்காமவேலன் தலைமையில் நடைபெற்றது. திரு. ஆ. வெற்றிவேலும் பேசினார்.

தர பரீட்சைக்குத் தோற்றினார்கள். 20 பேர் மட்டும் பல்கலைக்கழகத் தேர்வுக்குச் சித்திபெற்றார்கள். மற்றவர்கள் கதியென்ன? இதனால் தான் கனிஷ்ட பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள் எல்லாம் தொழில் நுட்ப நிலையங்களாக மாறவேண்டுமென வற்புறுத்துகிறேன்.''

முன்னாள் அதிபர் ஓறேற்றர் சுப்பிரமணியம் மேலும் பேசுகையில் தாம் சீனாவில் பெற்ற அனுபவத்தின் மூலம் அங்குள்ள கல்வி முறையை விளக்கினார். சீனாவில் ஆரம்ப வகுப்பில் கற்பிக்கும் கல்வியே எதிர்காலத்துக்கு உதவுவதாக உள்ளதென்றார்.

ருத்தல் தேயிலை

கோட்டை, வியா
ஆபிரிக்காக் கண்டத்தின் மிகப்பெரிய நாடான சூடான் இலங்கையிலிருந்து 150 லட்சம் ருத்தல் தேயிலையை வாங்குவதற்கு முன்வந்துள்ளது.

மேற்படி தேயிலையை வாங்கும்சூடான் ஸ்தாபனம் தேயிலை உற்பத்தி செய்யும் இந்தியா போன்ற வேறுபல நாடுகளில் இருந்தும் தேயிலையை வாங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

தமிழ், ஆங்கில மொழிகளில்
# அச்சு வேலை எதுவானாலும்
## எங்களையும் விசாரியுங்கள்

எமது வர்த்தக அச்சகப் பகுதியில்

★ கடிதத் தலைப்புகள்
★ அறிமுக அட்டைகள்
★ பெரிய சிறிய பிரசுரங்கள் — பிரசுரித்தல்
★ புத்தகம் கட்டுதல்
★ புதியவகைப் பற்றுசீட்டுப்புத்தகங்கள்
★ பெரிய பதிவுப் புத்தகம்
★ கோடிடித்தல்
ஆதியன.

குறைந்த கட்டணத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஊழியர்கள் திருப்தியான வேலை செய்கிறார்கள்.

சிறந்த சேவையே எமது நோக்கம்

ஈழநாடு (வர்த்தக அச்சகப் பகுதி)
தொலைபேசி: 389
த. பெ. எண்: 49,
63, சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிநாத் சென்று திரும்பிய 100 யாத்திரிகர்கள் வெள்ளத்திற்குப் பலி

## சுமார் 500பேர் அதிசயமாக உயிர் தப்பினர்

லஷ்மணபுரி, ஜூலை 23

இமயமலை அடிவாரத்திலுள்ள பத்திரிநாத் ஆலயத்துக்குச் சென்று திரும்புகையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நூற்றுக்கணக்கான யாத்திரிகர்களில் பலர் உயிர் தப்பி விட்டதாக கடைசியாகக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் நூறுபேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் அல்லது பாலம் உடைந்த இடிபாடுகளுக்குள் சிக்கிமாண்டிருக்கலாமென்று அஞ்சப்படுகிறது

பத்திரிநாத்திலிருந்துவாகனங்களில் இந்தயாத்திரிகர்கள் திரும்பிக்கொண்டிருந்தனர். பஸ்களிலும், டாக்ஸிகளிலும் இவர்கள் வந்துகொண்டிருக்கையில் பத்திரிநாத்திலிருந்து 60 கிலோமீட்டர் தொலைவில் அலக்நந்தா என்ற இடத்தில் கங்கை நதி உடைப்பெடுத்தது: இதுவரை கிடைத்த தகவல்களிலிருந்து 15 பஸ்களும் 5டாக்ஸிகளும் 2 இராணுவ ட்ரக்குகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த விபத்தில் 600பேர் வரை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாமென முதலில் அஞ்சப்பட்டது. ஆறு உடைப்பெடுத்து வெள்ளம் பெருகிவருவதை கண்டதும் பலரும் உயரமான இடங்களில் பாதுகாப்புத் தேடிக் கொண்டனரென்றும் இதனால் நூற்றுக்கணக்கான யாத்திரிகர்கள் உயிர்தப்பியதாகவும் கூறப்படுகிறது

தொடர்ந்து பெய்தகடும் மழைகாரணமாக கங்கை பெருக்கெடுத்ததால் ஜோசிமாப்பகுதியில் உடைப்புஏற்பட்டதாம்.

பத்திரிநாத் வீதியில் பல இடங்களில் மண்சரிவும் ஏற்பட்டிருக்கிறது வீதிகள் பலவும் வெள்ளத்தில்அடித்துச் செல்லப்பட்டிருப்பதாலும், போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாலும் சரியான தகவல்களைப்பெற முடியாதிருக்கிறது.

வெள்ளப்பெருக்கில் சிக்கியவர்களை மீட்பதிலும்வெள்ளம் அடித்துச் சென்றதாகக் கருதகப்படுபவர்களை மீட்பதிலும் அரசாங்க அதிகாரிகளுக்குஇராணுவம் உதவி புரிந்து வருகிறது.

வெள்ளப்பெருக்கில் சிக்கிபலர்மாண்டிருக்கலாம்என்ற செய்தி கேட்டதும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கவலை தெரிவித்தார். உத்தரப்பிரதேச முதலமைச்சர் கவலைதெரிவித்ததுடன்பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவிவழங்கவும் மீட்பு வேலைகளுக்காகவும் 10 லட்சம்ரூபாய் ஒதுக்கினார்.

வெள்ளப்பெருக்கினால் சிறிய கிராமங்கள் பலவும் அடித்துச் செல்லப்பட்டன. சேதவிபரங்கள் இன்னமும் சரியாக மதிப்பிடப்படவில்லை.

இன்று பத்திரிநாத்பகுதியில் அரசாங்க அதிகாரிகள் குழுவொன்று விமானத்தில் சென்று வெள்ளப் பெருக்கால்பாதிக்கப்பட்ட பகுதிகளைப்பார்வையிட்டது.

### அஸ்ஸாமிலும் வெள்ளப்பெருக்கு

அஸ்ஸாமில் பிரமபுத்திரா நதியும் அதன் 35 கிளைகளும் பெருக்கெடுத்திருப்பதாகவும் பல இடங்களிலும் உள்ள மக்கள்பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## சூடான் அதிபரே பிரதமரானார்

கார்டூம், ஜூலை 23

சூடான் மந்திரிசபை புதுப்பித்து அமைக்கப்பட்டிருக்கிறது. புரட்சி அரசாங்கத்தின் அதிபரே இப்பொழுது பிரதமராகவும் வெளிவிவகார அமைச்சராகவும் பொறுப்பேற்றிருக்கிறார். முன்னைய பிரதமர் உதவி அமைச்சராகவும்,நீதி அமைச்சராகவும் பதவி ஏற்றிருக்கிறார்.

— —

## 'தொடர்ந்து பேசத்தயார்'

கெய்ரோ, ஜூலை 23

மேற்காசிய நெருக்கடியைத் தணிப்பதற்கு அமெரிக்கா கடைசியாகத் தெரிவித்த யோசனைகள் சம்பந்தமாகத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்த ஐக்கிய அரபுக்குடியரசு தயாராக இருப்பதாக ஐக்கிய அரபுக் குடியரசு அறிவித்துள்ளது.

— —

தி. மு. க.

## 50 தொகுதிகளில் போட்டியிட தீர்மானம்

கோட்டயம், ஜூலை, 23

எதிர்வரும் இடைத்தேர்தலில் கேரளத்திலுள்ள தி. மு. க. 50 அசெம்பிளித் தொகுதிகளிலும் போட்டியிடவுள்ளது எனக்கட்சியின் ராஜ்யகிளை காரியதரிசி ஜனாப் எம். ஏ. மஜீத்தெரிவித்துள்ளார்.

போட்டியிட விருக்கும் அபேட்சகர்களது பெயர்களை தி.மு.க. பொதுச்செயலாளர் திரு. நெடுஞ்செழியன் ஆகஸ்ட் நடுப்பகுதியில் வெளியிடுவார் எனவும் தி. மு. க: வல[illegible] இடது கம்யூனிஸ்ட் [illegible]சிகள் தலைமையிலான முன்னணி எதிலும் சேராது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

—

அலய

பருத்தித்துறை நகைவியாபாரி கொலைவழக்கு

## '1-ம் எதிரியை வீட்டில் வைத்துக் கைது செய்தேன்'

வல்வெட்டித்துறை, வியாழன்

'முதலாவதுஎதிரியை அவரது ஊரான அல்வாய் தெற்கு மாலிசந்தி என்னுமிடத்திலுள்ள வீட்டில் வைத்துக் கைதுசெய்தேன். கைது செய்து விசாரணை செய்தபோது வீட்டின் பின்புறத்தில் திறப்புக்கோர்வை புதைத்து வைத்த இடத்தையும் காட்டினார்'

கொழும்பு இரகசியப் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. வ். டபிள்யூ. பி. செனிவரத்ன என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு அல்வாய் தெற்கைச் சேர்ந்த ச. இராமச்சந்திரன், நெல்லியடியைச் சேர்ந்த செ. நடராசா ஆகிய இருவரும் 1968-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2-ந் திகதி பருத்தித்துறை நகைவியாபாரியான எம். எம். சுல்தான் மொஹறதீன் என்பவரை சதிசெய்து கொலை செய்ததாக கொழும்பு இரகசியப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்டது.

திரு. செனிவரத்ன தொடர்ந்து சாட்சியமளிக்கையில், நான் எதிரியைக் கைது செய்தும் திறப்புக் கோர்வையை எடுத்த பின்னர் எதிரியை என்னுடன் வைத்துக்கொண்டு விசாரணைக்காக யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் ளேயே கூட்டிச்சென்றேன். யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியில் ஒரிடமும் எதிரியை கூட்டிச் செல்லவில்லை. 2-ம் எதிரியை குமார் இன்ஸ்பெக்டர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தபோது நான் அங்கு இருக்கவில்லை. எங்கள் விசாரணைக்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குமாருவுக்கும் எந்த விதமான தொடர்புமில்லை என்று கூறினார்

கொழும்பு இரகசியப் பொலிஸ் சார்ஜண்டுகளான இ. பேரம்பலம், எஸ். எம். குமாரரத்தின, பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் க. கந்தையா ஆகியோர் சாட்சியமளித்தபின் மேல் விசாரணை இம்மாதம் 29-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

— —

## பூமி நடுக்கத்தால் ஐவர் மரணம்

டோக்கியோ, ஜூலை 23

பூமிநடுக்கத்தால் ஐவர் மண்ணுக்குள் புதைந்து ஸ்தலத்திலேயே மரணமானார்கள்பலர் காயமுற்றனர்.

இப்பரிதாப சம்பவம் யப்பான் தீவுகளில் ஒன்றான கியூஷீவில் நடைபெற்றது. மேற்குறிப்பிட்டவர்கள் வீதிதிருத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது பூமி நடுக்கம் ஏற்பட்டு அவர்கள் மண்ணுக்குள் புதைபட்டார்கள்.

——

இராச கோபுரவேலை

## ஆசிரிய சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரிய சங்க தென்மராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சங்கத் தலைவர் திரு. வி. பி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

பிரதம பேச்சாளர்களாக திரு செ. சிவலிங்கம் (மீசாலை வீரசிங்கம் மாவித்தியாலய அதிபர்), திரு க. சுப்பிரமணியம் தாய்ச் சங்கப் பிரசாரக் காரியதரிசி ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதுவருட உத்தியோகஸ்[illegible]களாக பின்வருவோர் [illegible]ரிவு செய்யப்பட்டனர்: தலைவர் திரு வி. பி. செல்லத்துரை, உபதலைவர்கள் திரு எம். செல்லையா, திரு. [illegible] சுப்பிரமணியம், காரிய

## 'கதைத்தவர் திடீரென முகத்தில் பலமுறைஅடித்தார்'

வல்வெட்டித்துறை, வியாழன்

பஸ்ஸில் ஏறி இருந்தபின் முதலாம் எதிரி எனக்கு அருகில் வந்து என்னுடன் கதைத்துவிட்டு எனது முகத்தில் பலமுறை அடித்தார். எனது சட்டைப் பையைக் கிழித்த அதிலிருந்து பணத்தையும் பேனையையும் எடுத்தார். அதைத் தொடர்ந்து இரண்டாவது எதிரியும் அடித்தார் என்று புலோலி மேற்கைச் சேர்ந்தவரும், கொடிகாமம் புகையிரத நிலைய உதவி அதிபருமான திரு. ச. தியாகராசா பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கு புலோலியைச் சேர்ந்த மு யோகசம்பந்தன், செ. தங்கராசா ஆகிய இருவரும் கடந்த பங்குனி மாதம் 21-ந் திகதி புலோலி மேற்கைச் சேர்ந்த ச. தியாகராசாவைத் தாக்கி அவரிடமிருந்து ரூபா 44லும் ஒருபேனையும் களவாடியதாகப் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டது.

திரு. தியாகராசா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் சம்பவநாள் பிற்பகல் 5-15 மணியளவில்புலோலி ஓராங்கட்டை என்னுமிடத்தில் பஸ்ஸிற்காக நின்றேன். பஸ் வந்ததும் பஸ்ஸை மறித்தேன். அந்த நேரத்தில் 1-ம் எதிரி பஸ்ஸிலிருந்து இறங்கினார். இறங்கும்போது தான் திரும்பிவரும்வரைக்கும் பஸ்ஸை எடுக்கக்கூடாதென சாரதியைப் பார்த்து எச்சரிக்கை செய்தார். அவர் இறங்கியபொழுது பஸ்ஸில் ஏறினேன். திரும்ப 1-ம் எதிரி பஸ்ஸில் வந்து ஏறினார். ஏறியவர் நான் இருந்த இடத்துக்கு வந்து நீர்தானா கொடிகாமம் புகையிரத நிலையத்தில் வேலை செய்கிறனீர் என விசாரித்தார். ஆம் என்று சொன்னதும் என் முகத்தில் பலதரம் அடித்தார். பணத்தையும், பேனையையும் பறித்தார். அதைத் தொடர்ந்து 2-வது எதிரியும் அடித்தார். இச்சம்பவம்நடக்கும் போது பஸ் ஓடிக்கொண்டே இருந்தது. பஸ்ஸில் குழப்பம் அதிகரிக்கவே சாரதி ஒரு இடத்தில் பஸ்ஸை நிறுத்தினார். பிரயாணிகள் இறங்கினர். இறங்கிய பிரயாணிகள் பொலிஸ்காரர்கள் வருகிறார்கள் என்று சொன்னதும் எதிரிகள் இருவரும் அவ்விடத்தைவிட்டு ஓட்டம் பிடித்தனர். இது சம்பந்தமாக பருத்தித்துறை பொலிசில் புகார்செய்தேன்.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளை குற்றவாளிகளாகக் கண்டு றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 29-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 'விஞ்ஞான வளர்ச்சிக்கும் போட்டிதான் காரணம்'

— வடமாநில வித்தியாதிபதி

இமையாணன், வியா

'பாடசாலைகளில் புத்தகப் படிப்பு மாத்திரமின்றி சங்கீதம், விளையாட்டு அத்தனையுமே முக்கியமாகும். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி தோல்வி முக்கியமானதல்ல. அவை வெறும் போட்டியாகவே அமைய வேண்டும். போட்டி அடிப்படையில் நடைபெறும் காரியங்கள் முன்னேற்றமடைகின்றன. போட்டியினால்தான். விஞ்ஞானம், கலை அக்கலையுமே வளர்ந்

யில் பிறவுண் இல்லம் முதலாவது இடத்தையும், பிக்கினல் இல்லம் இரண்டாம் இடத்தையும், செல்லையா இல்லம் மூன்றாவது இடத்தையும், நியூற்றன் இல்லம் நான்காம் இடத்தையும் பெற்றன.

இன்றைய

## "தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் ஆயுதங்கள் விற்பனை பற்றி இறுதி முடிவு செய்யவில்லை"

### பிரி. வெளிவிவகார மந்திரி அறிவிப்பு

லண்டன், ஜூலை. 23

தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் ஆயுதங்கள் விற்பனைசெய்வது சம்பந்தமாக இன்னும் இறுதி முடிவு செய் சிக்கப்பட்டிருக்கும் ஆயுதங்கள் தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையை வளர்க்க உதவிபுரியமாட்டாதென்றும் கடல்களில்

சாமராஜ்ய நீதவான்கள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரி. வெளிவிவகார மந்திரி அறிவிப்பு

லண்டன், ஜூலை. 23

தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் ஆயுதங்கள் விற்பனைசெய்வது சம்பந்தமாக இன்னும் இறுதி முடிவு செய்யப்படவில்லையென்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஹியூம் பிரபு நேற்று பிரிட்டிஷ் ஆடசி மன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

ஆயுதங்கள் விற்பனைசெய்வதற்கு இறுதி முடிவு செய்தற்கு முன்பாக காமன் வெல் நாடுகள் தெரிவித்துள்ள கருத்துக்கள் கவலைகளை அரசாங்கம் கருத்தில் கொண்டு ஆராயுமென்று ஹியூம் பிரபு கூறினார்.

அவசரப்பட்டுகாமன்வெல்த்திலிருந்து விலகுவதற்கு முடிவுசெய்ய வேண்டாமென்று அவர் காமன்வெல்த் நாடுகளைக் கேட்டுக்கொண்டார்

தென்னாபிரிக்காவுக்கு விற்பனை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஆயுதங்கள் தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையை வளர்க்க உதவிபுரியமாட்டாதென்றும் கடல்களில் தான் அவற்றை உபயோகிக்கமுடியுமென்றும் ஹியூம் பிரபு கூறினார்

தென்னாபிரிக்காவுக்குமீண்டும் ஆயுதங்களை விற்பனை செய்யும் யோசனையை அரசாங்கம் கைவிடவேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த பிரேரணை மீது ஆட்சிமன்றத்தில்விவாதம் நடந்தது. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் திரு. ஸ்ருவர்ட் பேசுகையில் தென்னாபிரிக்காவுக்கு ஆயுத விற்பனை செய்யும் யோசனையை அரசாங்கம் கைவிடாவிட்டால் காமன் வெல்த் சிதறிவிடுமென்றும் இதனால் அபாயகரமான புதிய நிலையொன்று ஏற்படலாமென்றும் கூறினார்

# 3 ஆபிரிக்கத் தலைவர்கள் ஆலோசனை முடிவு

ஸாம்பியா, தான்ஸானியா, உகண்டா ஆகிய மூன்று ஆபிரிக்கநாடுகளின் அதிபர்களும் நேற்று தாருஸ்ஸலாத்தில் கூடி தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் மீண்டும் ஆயுத விற்பனை செய்வது சம்பந்தமாக ஆலோசனை செய்தனர். ஆறுமணி நேரம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளின் முடிவில் கூட்டறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் மீண்டும் ஆயுதங்கள் விற்பனைசெய்தால் காமன்வெல்த்திலிருந்து வெளியேறிவிடுவதென்ற தமது முடிவை தான்ஸானியா அதிபர் நியாரரே மீண்டும் வலியுறுத்திக்கூறியதாகவும் உகண்டா, ஸாம்பியா அதிபர்களும் காமன்வெல்த்திலிருந்து விலகுவதற்கு ஒப்புக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

## அமெரிக்க நிலை

தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் மீண்டும் ஆயுதங்கள் விற்பனைசெய்வது சம்பந்தமாக அமெரிக்காவுக்கு எந்தவித தொடர்புமில்லையென்று அமெரிக்கராஜாங்க இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

---

## சோவியத் ஆயுதங்கள்

திரிப்பொலி, ஜூலை 23

லிபியாவுக்கு பெருமளவில் சோவியத் யூனியன் படைச்சாதனங்கள் வழங்கியிருப்பதாக லண்டன் செய்தியொன்று கூறுகிறது.

பிரிட்டனில்

## இலங்கை வானொலி அதிகாரி

லண்டன், ஜூலை 23

வானொலி ஒலிபரப்பு சம்பந்தமாக அடுத்த வாரம் பிரிட்டனில் ஆரம்பமாகவிருக்கும் பயிற்சி வகுப்புகளில் இலங்கையின் சார்பில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிர்வாகிகளில் ஒருவரான திரு. வேர்ணன் கொரியா பங்குபற்றுவார்.

பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இந்தப் பயிற்சி வகுப்புகளை ஒழுங்கு செய்துள்ளது இம்மாதம் 27ந் திகதி ஆரம்பமாகும் இப்பயிற்சி வகுப்புகளில் இலங்கை உட்பட 22 நாடுகளைச் சேர்ந்த வானொலித்துறை அதிகாரிகள் கலந்து கொள்கிறார்கள்,

வானொலி நிகழ்ச்சிச் சேவைகள், ஒலிபரப்புப் பொறியியல், செய்மதித் தகவல் தொடர்பு, செய்திச் சேவை, கல்வி ஒலிபரப்பு, ஒலிபரப்புச் செலவினங்கள் போன்ற வானொலித்துறையின் பல்வேறு அம்சங்கள் பற்றி இப்பயிற்சி வகுப்புகளின்போது விளக்கப்படும்.

## சாம்ராஜ்ய நீதவான்கள் சங்கம்

லண்டன், ஜூலை 23

சாம்ராஜ்ய நீதவான்கள் சங்கம் ஒன்றை அமைப்பதென லண்டனில் ஆரம்பமாகியுள்ள சாம்ராஜ்ய நீதவான்கள் மகாநாட்டின் போது கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை உட்பட 25 நாடுகளைச் சேர்ந்த 50 நீதவான்கள் மகாநாட்டில் பங்குபற்றிவருகிறார்கள். இலங்கை சார்பில் கொழும்பு பிரதம நீதவான் திரு. ஈ. எவ். டீ. சில்வா இமமகாநாட்டில் கலந்து கொள்கிறார்.

பிரபுக்கள் சபைத் தலைவர் சான்சலர் பிரபு இம்மகாநாட்டை ஆரம்பித்துவைத்துப்பேசுகையில் சாம்ராஜ்ய நீதவான்கள், ஒரு சங்கம் அமைப்பதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். சாம்ராஜ்யக் கூட்டுறவு மேலும் பலமடைய இவ்விதக் கூட்டமைப்பு ஸ்தாபனங்கள் அவசியமென்றும் அவர் எடுத்துரைத்தார்.

---

## நீரில்மூழ்கி 49 பேர் மரணம்

டோக்கியோ, ஜூலை 23

யப்பான் கடற்கரைகளிலும் நதிகளிலும் நீரில் மூழ்கி 49 பேர் மாண்டனர் எனவும் 14 பேரைக்காணவில்லையெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## இ, சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தீர்மானம்

தாவடி, வியாழன்

''தொழிலாளர்களின் கஷ்டங்களை நிவர்த்திசெய்யுமுகமாகச் சுருட்டுத் தொழில் கூட்டுத்தாபனம் அமைக்கவேண்டும். தொழில் மந்திரியையும், கைத்தொழில் மந்திரியையும் வரவழைக்கவேண்டும்'' என்ற தீர்மானங்கள் இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. தாவடியில் உள்ள சங்க அலுவலகத்தில் கூட்டம் நடைபெற்றது.

சுருட்டுத் தொழிலாளருடைய கஷ்டங்களை நிவர்த்திசெய்யக் கோரும் மகஜரொன்றை, பிரதம மந்திரி, நிதிமந்திரி தொழில் மந்திரி, கைத்தொழில் மந்திரி ஆகியோருக்கு அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மு. க. வலது, இடது கம்யூனிஸ்ட் கட்சிகள் தலைமையிலான முன்னணி எதிலும் சேராது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## ஆலய உற்சவங்கள்

பண்டத்தரிப்பு, புதன்

இம்மாதம் 25-ம் திகதி புனிதயாகப்பரினது திருநாளும் 26-ம் திகதி புனித அன்னம்மாள் திருநாளும் நடைபெறவிருப்பதால் சில்லாலை, இளவாலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் புனித யாகப்பர் திருநாளுக்கான உற்சவமும் மானிப்பாய் வலித்தூண்டல் ஆகிய இடங்களில் புனித அன்னம்மாள் திருநாளுக்கான உற்சவமும் நடைபெற்று வருகின்றன. 26-ம் திகதியுடன் இவ்வுற்சவங்கள் முடிவடையும். கீரிமலைக்கு அணித்தாயுள்ள வலித்தூண்டல் வட பகுதியில் பிரசித்திபெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## அமெரிக்கா செல்கிறார்

பண்டத்தரிப்பு, வியாழன்

பண்டாரவளை கட்டளைக் குரவர் வண. டென்சில் பெரேரா வட அமெரிக்காவில் உள்ள லூசியானா செல்லவிருக்கிறார். அங்குள்ள பஞ்சு வயல்களிலும் ஆலைகளிலும் வேலைசெய்யும் நீக்கிரோ மக்களிடையே திருத்தொண்டு புரிவார்.

இப்பணிக்கு இலங்கையிலிருந்து செல்லும் முதற் சுதேச குருஇவராகும்சமயப் பணிகளுடன் இளைஞர் சேவையிலும் தமது பங்கு சாரணர் இயக்கத்திலும் ஈடுபாடுடைய இவர் சிங்கள கவிஞருமாவர்:

---

## இவர்கள் கோரிக்கை

விஸ்வமடு, வியாழன்

தமக்குரிய பள்ளக்காணிகளுக்குப் பதிலாக மேட்டுக்காணிகள் தரும்படியும், அல்லது தமது பள்ளக்காணிகளில் நெல்விதைக்க அனுமதிதரும்படியும், விஸ்வமடு வாலிபர்களால் விஸ்வமடு படித்தவாலிபர் குடியேற்றத்திற்கு சொந்தமான பல நோக்குக் கூட்டுறவுச்சங்கக் கட்டிடத்தில் நடந்த விவசாயிகள் மகாநாட்டில் விஸ்வமடு காணிநிலபொறுப்பதிகாரியிடம் வேண்டுகோள்விடுக்கப்பட்டது. இது பற்றியமுடிவைக் கொழும்பிலுள்ள அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கலந்தாலோசித்தபின் தெரிவிப்பதாக பிரஸ்தாப அதிகாரி தெரிவித்தார்.

...அவர்கள் மண்ணுக்குள் புதைபட்டார்கள்.

---

## இராச கோபுரவேலை நடைபெறுகிறது

ஊர்காவற்றுறை.விழா.

புங்குடுதீவு கண்ணகை அம்மன்கோவில் எனஅழைக்கப்படும் ஸ்ரீ இராசஇராசேஸ்வரி அம்பாள் கோவிலுக்கு இராசகோபுரம் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான முயற்சியில் ஆலயத்தின் புதிய பரிபாலனசபையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

---

## திருவிழா

ஊர்காவற்றுறை,வியா.

சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கதிர்காமத்திருவிழா நடைபெற்றது.

பகல் நடைபெற்ற விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து இரவு கதிர்வேலாயுத சுவாமி வீதிவலக்காட்சியும் நடைபெற்றது. பெருந்தொகையான அடியார்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

---

## இவர்களுக்கு சம்பளம் கிடைக்கும்

### கல்வி அமைச்சர் உறுதி

கொழும்பு, வியாழன்

வடபகுதியிலுள்ள நான்கு பௌத்த தமிழ்ப்பாடசாலைகளிலுமுள்ள 36 ஆசிரியர்களுக்கும் இனி சம்பளம் கிடைக்கும். கடந்த ஆண்டு ஜூன் முதலாம் திகதியில் இருந்து இப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற போதிலும் ஏற்கனவே இங்கு கடமையாற்றிவந்த ஆசிரியர்களுக்கு அரசாங்கம் சம்பளம் வழங்காதிருந்தது.

இதுவிஷயமாக நியமன எம். பி. திரு. எம். ஸி, சுப்பிரமணியம் தலைமையில் தூதுகோஷ்டியொன்று கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மஹ்மூத்தைச் சந்தித்துப் பேசியபோது இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து இவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற நாளிலிருந்து பிரஸ்தாப ஆசிரியர்களின் சம்பள நிலுவைப் பணம் வழங்கவும் அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் திரு வி. பி. செல்லத்துரை, உபதலைவர்கள் திரு எம். செல்லையா, திரு. சுப்பிரமணியம், காரியதரிசி திரு. எம். கதிரேசு, உபகாரியதரிசிகள் திரு ந. சிதம்பரநாதன் திரு. அ விநாயகமூர்த்தி, தனதிகாரி திரு. எம். இராசரத்தினம் உபதனதிகாரி. திரு. அ. சந்திரசேகரம்.

திருவாளர்கள். த. ப. கைலாசபிள்ளை, மு. தில்லைநாதன், வீ. கே. தம்பு, வி. எஸ். கந்தையா, சி. சின்னராசா, த. துரைச்சாமி, க. கந்தையா ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரியப்பட்டனர். (குவிம)

---

## இளைஞர் விவசாயக்கழகம்

உடுப்பிட்டி, வியாழன்

நவிண்டிலில் இளைஞர் விவசாயக்கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு, இ. இராஜேந்திரம், உபதலைவர்: திரு. கி. தவச்செல்வம், செயலாளர்: திரு. க. கந்தசாமி, உபசெயலாளர்: திரு. க. குமாரசாமி, பொருளாளர்: திரு. வ, கந்தசாமி, கணக்குப்பரிசோதகர்கள்: திருவாளர்கள் வ. இராசதுரை, வே. கந்தவனம்.

---

## பழைய மாணவர் சங்கநிர்வாகிகள்

தாவடி. வியா.

''கொக்குவில் மேற்கு ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்அண்மையில்.தலைமை ஆசிரியர் திரு. த. தருமலிங்கத்தின் தலைமையில் கூடி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. த. தருமலிங்கம் தலைமையாசிரியர் உபதலைவர்கள்: திரு. த. சிவயோகராசா திரு. பொ. நடராசா திருமதி கே. சிவநிதி செயலாளர்: திரு. சி, அன்னலிங்கம் உப செயலாளர்: செல்வி தி. மாணிக்கவல்லி பொருளாளர்: திரு. வே. இராசகுலேந்திரன் உபபொருளாளர்: திரு. க. கமலேஸ்வரன்.

10 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

மானதல்ல. அவை வெறும் போட்டியாகவே அமைய வேண்டும். போட்டி அடிப்படையில் நடைபெறும் காரியங்கள் முன்னேற்றமடைகின்றன. போட்டியினால்தான். விஞ்ஞானம், கலை அத்தனையுமே வளர்ந்துள்ளன. போட்டியின் மூலம் பொறாமை ஏற்பட்டு விடக்கூடாது.'

வடமாநில வித்தியாதிபதி திரு. வி. சங்கரலிங்கம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழாவில் தலைவர் தமது தலைமையுரையின் போது 'உடல் வளர்ச்சிக்கு மிக முக்கியமான அம்சம் விளையாட்டுப் போட்டி' என்று கூறினார்.

வெற்றிபெற்ற வீரர்களுக்கு வடமாநில வித்தியாதரிசி சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கினார்.

இவ்விளையாட்டுப்போட்டி

---

## வீதிதிருத்துவதில் தாமதம்

தாவடி, வியாழன்

தாவடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகே உள்ள வீதிகற்கள் பரவப்பட்டுப் பல நாட்களாகியும்இன்னும் செப்பனிடப்படாதிருப்பதால் இப்பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதில் மிக்க கஷ்டமடைகின்றனர்

---

## 40 வருட சேவை

பண்டத்தரிப்பு, வியாழன்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் திரு: சி. சவரிமுத்து தமது 40 வருட சேவையின் பின் இம்மாதத்துடன் ஓய்வு பெறுகிறார், இவர் வண. லோய் சுவாமியார் பாடசாலை அதிபராயிருந்தகாலந்தொட்டு ஆங்கிலம், லத்தீன் ஆகிய பாடங்களை குருமட மாணவர்களுக்குக் கற்பித்து வந்தார்.

---

## 'வசதி குறைவு'

பண்டத்தரிப்பு, வியா

இளவாலை மகாவித்தியாலயம் 900 பிள்ளைகளைக் கொண்டிருந்தும் அதன் விளையாட்டு மைதானம் 'வலைப்பந்து'. 'பாட்மின்ரன்' போன்ற விளையாட்டுகளை மட்டுமே இதில் நடாத்த முடியும் என்றும் மாணவரின் சுகசீவியத்துக்குரிய வகையில் தேகப்பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் அதிபர் தெரிவித்துள்ளார்.

பெற்றன.

---

# இன்றைய பலன்

ஆடி மாதம் 8-ம் திகதி
[24-7-70]

மேஷம்- தொழில் புரியும் இடத்தில் பாராட்டப்படுவீர்கள். உற்சாகமூட்டும் கடிதம் ஒன்று கிடைக்கலாம். சிறப்பானதினம்.

ரிஷபம்- சிந்தனை அலைகள் மோதும். செய்தொழிலில் பதட்டநிலை தென்படும். உடல்நலத்தை பேணிக் கொள்ளவும்.

மிதுனம்- கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும். அறிஞர்கள் ஆதரவும் தாராளமாக கிடைக்கும்.

கடகம்- வாழ்க்கையில் வசந்தம் நிலவும் சிலர் புதிய வாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துவர்.

சிம்மம்- எவ்வித சிக்கலான பிரச்னையையும் பேச்சுவன்மையினால் சமாளித்துவிடுவீர்கள். மதிப்பும் உயரும்.

கன்னி- குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். பிள்ளைகளினால் பெருமைக்கும் இடமுண்டு.

துலாம்- எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும், நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்கு இடமுண்டு. சிந்தித்தபின் செயலாற்றுக.

விருட்சிகம்- தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும். பொதுப்பணியில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் ஆதரவை பெறுவீர்கள்.

தனு- புதிய உடன்படிக்கையின் மூலம் நல்ல திருப்பம் ஏற்படும். மகிழ்ச்சிகரமான பிரயாணமும் உண்டு.

மகரம் சகோதரபாசம் தலைதூக்கிநிற்கும். பிதாவழிச்சுகம் கிடைக்கும். நின்மதியான தினம்.

கும்பம் பூமிப்பிணக்குகளின் மூலம் வழக்குவிவகாரங்களிலும் மாட்டிக்கொள்ள நேரிடலாம். உடல்நலம் பாதிக்கப்படலாம்.

மீனம்- சிந்தனையின் தாக்குதல்கள் உங்களை சிந்திக்க வைக்கும். வைத்தியச்செலவுக்கும் இடமுண்டு அவசர முடிவை தவிர்க்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மற்றவர்களைப் பற்றித் தீர்ப்புக்கூறவேண்டாம், உங்களைப் பற்றித்தீர்ப்புக்கூறவேண்டும் அப்போதுதான் உண்மையில் மகிழ்ச்சியடைய முடியும். மற்றவர்களைப் பற்றித் தீர்ப்புக் கூற முயன்றால் இன்னலைத் தேடிக்கொள்ள நேரும்.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 8-ந் திகதி (24 - 7 - 70)

## அமைச்சரின் எச்சரிக்கை

வாடகை வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு பாதுகாப்பளிக்கப்படுமென்றும் சட்டவிரோதமான முறையில் வீட்டுச் சொந்தக்காரர்கள் குடியிருப்பாளர்களை நிர்ப்பந்தப்படுத்தி வெளியேற்றும் நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லையென்றும் வீட்டுச் சொந்தக்காரர்கள் தங்களது மனப்போக்கை மாற்றிக்கொள்ளாதபட்சத்தில் சிறைத்தண்டனை அளிப்பதற்கு ஏற்றவகையில் சட்டம் கொண்டுவரப்போவதாகவும் வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர்கெனமன் ஆட்சிமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். இதேசமயம் வீட்டு வாடகை குறித்து விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன் அமைச்சர் நியமித்த விசாரணைக் குழுவும் தனது அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. குடியிருப்பாளர்கள் படும் அவஸ்தையும் குடியிருப்பாளர்களை எழுப்புவதற்காகச் சட்டவிரோதமான முறைகளைச் சில வீட்டுச் சொந்தக்காரர்கள் கையாண்டு வருவதையும் அந்தக் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. குடியிருப்பாளருக்கு தண்ணீர் மின்சார வசதிகளைத் தடைசெய்து அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி வெளியேறச்செய்யும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்குச் சிறைத்தண்டனை வழங்கவேண்டுமென்று அந்த விசாரணைக் குழு தனது அறிக்கையில் சிபார்சு செய்திருக்கிறது, விசாரணைக் குழுவின் சிபார்சுகளின் அடிப்படையில் புதிய சட்டம் கொண்டுவரப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். இதற்கிடையில் வீட்டுச்சொந்தக்காரர்கள் தங்கள் மனப்போக்கை மாற்றிக் கொள்வதற்கும் அவர் அவகாசம்கொடுத்திருக்கிறார். இந்த அவகாசத்தை அவர்கள் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

கொழும்பில் மட்டுந்தான் குடியிருப்பாளர் நிலைமோசமானதென்று அரசாங்கம் கருதக்கூடாது. யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் சகல பாகங்களிலும் வாடகைக்குக் குடியிருப்போர் பல கஷ்டநஷ்டங்களை அனுபவிக்கவேண்டியிருக்கிறது. இவைபற்றியும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

பல வருடங்களாக ஒரே வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தவர்களுக்கு அந்த வீட்டையே சொந்தமாக்கக் கூடியமுறையில் சட்டம் கொண்டுவரப் போவதாக முன்னைய அரசாங்கத்தில் வீடமைப்பு அமைச்சராக இருந்த ஒருவர் அறிவித்ததைத் தொடர்ந்து குடியிருப்பாளர் பலருக்குப் பலவித தொல்லைகள் ஏற்பட்டதுடன், பலவருடம் ஒரே வீட்டில் குடியிருந்து தமது வசதிக்காக தமது பணத்தைச் செலவிட்டவர்களே அந்த இடத்தைவிட்டு வெளியேறவும் நேரிட்டது:

இதேநிலை ஏற்படாமல் குடியிருப்பாளருக்கு இடைக்காலப் பாதுகாப்பு அளிப்பதுடன் குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் தமக்கென சொந்தமாக ஒரு வீட்டை அமைத்துக்கொள்ளவும் இந்த அரசாங்கம் வழிவகுத்துக் கொடுக்கவேண்டும். இது நிறைவேறுமென்ற நம்பிக்கையும் குடியிருப்பாளருக்கு இருக்கிறது.

## இந்திய அரசியல் நிலை

இந்தியாவில் திருமதி இந்திராவின் இண்டிகேட்

## 'இலங்கை அரசியல்' பற்றி இந்தியத் தினசரி

('இலங்கைக்குப் புது அரசியல்' என்ற தலைப்பில் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் பிரபல தமிழ்த் தினசரி 'தினமணி' இம்மாதம் 21-ம் திகதி எழுதியிருந்த தலையங்கம் இங்கு தரப்படுகிறது)

அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கைப் பிரதிநிதி சபை, அரசியல் நிர்ணய சபையாகவும் பணியாற்றத் தொடங்கியுள்ளது. பிரதிநிதி சபையில் ஆளும் கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்குக்கு அதிகமான மெஜாரிட்டி இருந்து வருகிறது. எனவேதான் விரும்பும் வகையில் புது அரசியலை உருவாக்க மந்திரிசபையால் இயலும். எனினும் அரசியல் நிர்ணய சபையானது கூடியவரை கருத்தொற்றுமையை உருவாக்கி, அந்த அடிப்படையில் புது அரசியலை அமைக்க முற்படுவதுதான் விவேகமுள்ள செயலாக இருக்கும்.

இதுவரை இலங்கைக்கு 'சிலோன்' என்ற ஆங்கிலப் பெயர் இருந்து வந்தது. இனி அது "ஸ்ரீ லங்கா துவீபம்' (இலங்கைத் தீவு) என்று அழைக்கப்படும் சோஷலிஸ்ட் குடியரசின் அமைப்பில் ஆளும் கூட்டணி நாட்டம் கொண்டுள்ளது என்பதை பிரதமர் ஸ்ரீமாவோ அறிவித்துள்ளார். இதுவரை டொமினியனாக இருந்து வந்த இலங்கைக்கு குடியரசு அந்தஸ்து வழங்கப்படும். பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொள்வதற்கு இருந்து வந்த உரிமை ரத்தாகும். இந்தியாவைப் போலவே இலங்கையும் குடியரசான பிறகும் காமன்வெல்தில் தொடர்ந்து இருந்து வரலாம் என்று கூறப்படுகிறது. இதைப்பற்றி பிறகு முடிவு எடுப்பார்கள்.

ஆங்கிலம் சட்டசபை அலுவல் மொழியாக இருந்த நிலைமை அரசியல் நிர்ணய சபையின் முதல் நாளன்றே மாறிவிட்டது. சிங்களமும் தமிழும் பயன்படுகின்றன. இருவழி மொழி பெயர்ப்புக்கு முழு வசதி செய்து கொடுக்கப்படுமானால் மொழிப் பிரச்னை எழாதவாறு பார்த்துக்கொள்ள முடியும். பல இனத்தவரும், பல மதத்தவரும் இருந்த போதிலும் ஒருமனப்பட்ட இலங்கை சமுதாயமாக மக்கள் இணங்கி வாழ்வதற்கு அரசியல் சாஸனம் வழிவகை செய்யும் என்று பிரதமர் கூறியிருப்பதை வரவேற்கிறோம். மொழி, இனம், சமயம் காரணமாக எந்தவிதமான பாகுபாடும் செய்யப்படமாட்டாது என்பதை உறுதி செய்யும் ஜீவாதார உரிமை ஷரத்து அரசியல் சாஸனத்தில் இடம்பெறும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழர்களின் இரண்டு கட்சிகளும், பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசிக் கட்சியும் அரசியல் நிர்ணயப்பணிகளில் ஒத்துழைக்க முன்வந்தது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி. அவற்றின் இந்த சமிக்ஞைக்கு அரசாங்கம்போதிய மதிப்புக் கொடுத்து எல்லாப் பிரச்னைகள் மீதும் கருத்தொற்றுமையை உருவாக்குவதில் அக்கறை காட்டுவார் என்று பார்க்கிறோம்.

இன்னும் இலங்கைப் பிரஜாவுரிமை பெறாமல் இருந்துவரும் இந்திய வம்சாவழியினரின் பிரச்னைகளை புதுநோக்குடன் மனிதாபிமான அடிப்படையில் அணுகி, தரும நியாயத்துக்கு ஏற்ற தீர்வு காண்பது அவசியம். 1964-ல் கையெழுத்தான ஸ்ரீமாவோ — சாஸ்திரி உடன்பாட்டை அமுல்நடத்தி வைப்பது பலவகைகளில் சிரமமாகிவிட்டது. எனவே புது அடிப்படையில் பிரஜாவுரிமைப் பிரச்னைகளை அணுக வேண்டிய அவசியமேற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. தேர்தல் நடந்து முடிந்துவிட்டதால் ராஜீய சங்கடம் எதுவுமின்றி உரிமையுள்ள எல்லோரையும் இலங்கைப் பிரஜைகளாக தாமதமின்றி பதிவு செய்து அவர்களுக்கு முழு வாய்ப்பு அளிக்கவேண்டும். மற்றவர்கள் இரண்டாந்தர அந்தஸ்தினராக இருந்து வருவது கொஞ்சக் காலத்துக்கு தவிர்க்க முடியாத நிலைமையாக இருக்கலாம். ஆனால் நம்மிரு அரசாங்கங்களும் மனிதாபிமானத்துடன் அவர்களது பிரச்னையைத் தீர்ப்பதில் அக்கறை காட்ட வேண்டும். உண்மையுணர்வுடன் கூட நியாயமான புதுப் பிரேரணைகளை இலங்கை அரசு உருவாக்கி அனுப்பி வைத்தால் அவற்றிற்கு டில்லி போதிய மதிப்புக் கொடுத்து, பயன்தரக்கூடிய பேச்சை நடத்துவதற்கு முன்வரக்கூடும்.

## 'நூல்நிலையம் வேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

'எமது நகரசபை எல்லைக்குள் மாணவர்களாகிய நாம் விரும்பிய புத்தகங்களைப் படித்துப்பயன் பெறக்கூடியளவு ஒருபொது நூல் நிலையம் இல்லாததால் இப்பகுதி இளைஞர்களுக்கு பெருத்த கவலையளிக்கிறது'

இவ்வாறு சாவகச்சேரி வடக்கு மாணவர் மன்றம் சாவகச்சேரி எம். பிக்கும் சாவகச்சேரி நகரசபைத் தலைவருக்கும் அனுப்பிய மகஜரில் கூறியுள்ளது.

மேலும் அவ்வறிக்கை கூறிவதாவது:-

வட இலங்கையிலுள்ள நகரசபைகளில் சிறப்பானது சாவகச்சேரிநகரசபை. மாணவ மாணவிகள் பல வெளிநாட்டு நூல்களையும் படித்துப்பயனடைய வேண்டும். நாம் படிக்கும் போது எமது சந்தேகங்களை அறிய ஆசிரியரை நாடுவதுபோல நூல் மூலம் நாடலாம். மேலைத்தேசத்தவர் அதிகம் நூல்களை தினமும் படிப்பதாலேயே சகல துறைகளிலும் அபிவிருத்திபெற்றுள்ளார்கள். கல்வியைப் பெற நாம் அதிகம் நூல்களைப் படிக்க ஒழுங்குசெய்து தரவும்' (குவிம)

.........

## கிணற்றுக்கட்டில் படுத்திருந்த மூவர் கிணற்றுள் விழுந்தனர்

மட்டுவில், வியாழன்

நேரம் தெரியாது தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கச் சென்று கிணற்றுள் விழுந்து மயிரிழையில் உயிர் தப்பினர்.

கல்வயலைச் சேர்ந்த கா. வேதநாயகம், வி. கதிரவேலு, சந்திரசேகரம் ஆகிய மூன்று வாலிபருமே மேற்படி விபத்திற்குள்ளானவர்கள். இவர்கள் இதுபற்றிக் கூறியதாவது:-

தாங்கள் நேரம் தெரியாமல் கிணற்றடிக்குத் தண்ணீர் இறைக்க வந்ததாகவும், ஏனைய தோட்டக்காரர் வராமையால் தாம் கிணற்றுக்கட்டில் படுத்துக்கொண்டதாகவும், சிறிது நேரத்தில் உருண்டு மூவரும் கிணற்றினுள் விழுந்துவிட்டதாகவும், தாம் போட்ட கூச்சலில், அப்பொழுது தோட்டத்திற்கு வந்துகொண்டிருந்த தோட்டக்காரர் தம்மைக் காப்பாற்றியதாகவும் கூறினர்.

## "சிறுபான்மை இனத்தின் பாதுகாப்பு பறிபோகிறது!"

— வி. நவரத்தினம்

ஊரதீவு, வியா

தற்போது நடைமுறையில் இருந்துவரும் அரசமைப்புச் சட்டத்தின்படி இலங்கைக்கோடுகளிலே தீர்க்கப்படும் தீர்ப்புகளுக்கு எதிராக பிரிவு கவுன்ஸிலுக்கு அப்பீல் எடுக்கும்உரிமையே நமக்கும் பிரித்தானிய அரசபீடத்துக்கும் இருக்கும் தொடர்பாகும்: அதுவுமன்றி தமிழர்களுக்கு எதிராக பாரபட்சமானசட்டங்களை இயற்றவும் முடியாது. இவை இரண்டும் இருப்பதினால் இலங்கை பூரணசுதந்திரம் உள்ளஓர் அரசுஎன்று சொல்ல முடியாமல் போய்விடுமா? சிறுபான்மை இனத்தவருக்குப் பாதுகாப்பாக இருக்கும் இவை இரண்டையும் ஏன் அகற்றவேண்டும்? இவை இரண்டையும் அகற்றி பூரணவல்லமை கொண்ட ஆட்சி மன்றம் அமைக்க வேண்டுமென விரும்பினால் அதற்கு ஒரே ஒரு கருத்துத்தான் உண்டு. அதாவது சிறுபான்மையினருக்குப் பாரபட்சமான சட்டங்களை இயற்றுவதற்குக் கூடிய உரிமைகொண்ட ஆட்சி மன்றம் வேண்டுமென்பதுதான் பெரும்பான்மையினரின் விருப்பமாகும். அடிப்படை உரிமைச் சாசனத்தை அரசமைப்புச் சட்டத்தில் புகுத்தினால்போதும் என்று கூறுகிறார்கள். அந்தச் சாசனத்தை மீறும் சட்டங்களை தமிழர்களுக்குப் பாதகமான சட்டங்களை இலங்கையிலே அமைக்கப்படும் எந்தநீதிமன்றமாவது செல்லுபடியாகாது என்று தீர்க்குமா? உதாரணமாக சிங்களம் மாத்திரம் சட்டம் செல்லுபடியாகாது என்று எந்த ஒரு இலங்கை நீதிமன்றமும் தீர்க்குமா?

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும் முன்னாள் ஊர்காவற்றுறைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு. வ. நவரத்தினம் காரைநகர் புதுறேட்டில் நடைபெற்ற கழகத்தின் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்; திரு நவதர்மராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு வ நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்றிருக்கும் நிலையில் சட்டங்கள் பேசிப்பிரயோ

எல்லைக்குள் என்னவகையிலே தமிழர்களுக்கு எதிராக சட்டங்களையும் நடவடிக்கைகளையும் எடுத்தார்கள் என்பதை இந்தத்தலைவர்களும் அவர்களது கட்சியினரும் மறந்துவிட்டார்கள் போற்தோன்றுகிறது."

உடும்பராய் பட்டின சபை உறுப்பினர் மு. சி. கனகசுந்தரம், அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் முன்னாள் துணைச்செயலாளர் க. பத்மநாதன் ஆகியோர் உட்படப்பலர் உரையாற்றினர்.

### புதிய அரசாங்கம்

## யாழ். உஸ்மானியா கல்லூரிக்கு ரூ. 2 லட்சம் ஒதுக்கியுள்ளதாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த அரசாங்கம் இக்கல்லூரியின் வளர்ச்சியில் முட்டுக்கட்டை போட்டது. மக்கள் அரசாங்கம் பதவி ஏற்றதும் இக்கல்லூரிக்கு 2 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியர் கல்லூரி மாணவர்களால் நேற்று அளிக்கப்பட்ட வரவேற்பில் கலாச்சார உதவி அமைச்சர் திரு. சோமவீர சந்திரசிறி மேற்கண்டவாறு கூறினார்.

உதவி அமைச்சர் மேலும் கூறியதாவது: இக்கல்லூரியின் அபிவிருத்திக்காக 64ம் ஆண்டு கூட்டரசாங்கம் போட்டிருந்த திட்டத்தை முன்னாள் கல்விமந்திரி திரு. இரியகொல்லை புறக்கணித்துவிட்டார். கடந்த 5 ஆண்டு காலமாக இக் கல்லூரியின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்படவில்லை,

தற்போதைய கல்வி மந்திரி மாணவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர். மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை உடையவர். மாணவர்களின் கலை, கலாசாரத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்வேன்.

### வெளிநாட்டு

## விதை வெங்காயத்தினால் எதிர்பார்த்த பலனில்லை!

யாழ்ப்பாணம், வியாழன்

வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யபட்ட 5000 தொன் விதைவெண்காயம் துர் அதிர்ஸ்டவசமாக எதிர்பார்த்தபலன் தரவில்லை இவ்வாண்டு மழை அதிகம் பெய்தபடியால் வெங்காயம் நட்டபோதும் அழிவு ஏற்பட்டது மேலும் மழை தொடர்ந்துபெய்தகாரணம் வெங்காயம் 'காய் தரம்' குறைந்துவிட்டது. வட பகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை மூலம் பல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விதைவெங்காயம் வழங்கப்பட்டது, வெங்காயம் பெருத்து தக்கபலன் தராதது பற்றியும், வெங்காயம் உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் பற்றியும் ஆராய்ந்து நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது இதற்கான ஆராய்ச்சிக்குழுவில் திரு' யூஜின் நாணயகார (உதவி விவசாய அதிபர்) திரு. கே. சதாசிவம்பிள்ளை (விவசாய பொருளியலாளர்) யாழ். மாவட்ட விவசாய அதிபர் திரு. பி. மாணிக்கவாசகர் ஆகியோர் குடாநாட்டில் கமக்காரர்களை நேரில் சந்தித்து புள்ளிவிபரம் திரட்டுவார்கள். (குவிம)

.........

## யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி

கஸ்தூரியார் வீதியில் நா. தேவராசா என்பவர் கைமணிக்கூடு ஒன்றைக் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். இதற்கிடை

மென்ற நம்பிக்கையும் குடியிருப்பாளருக்கு இருக்கிறது.

பல இனத்தவரும், பல மதத்தவரும் இருந்த போதிலும் ஒருமனப்பட்ட இலங்கை சமுதாயமாக மக்கள் இணங்கி வாழ்வதற்கு அரசியல்

றிற்கு டில்லி போதிய மதிப்புக் கொடுத்து, பயன்தரக் கூடிய பேச்சை நடத்துவதற்கு முன்வரக்கூடும்.

லை, அப்பொழுது தோட்டத்திற்கு வந்து கொண்டிருந்த தோட்டக்காரர் தம்மைக் காப்பாற்றியதாகவும் கூறினர்.

## இந்திய அரசியல் நிலை

இந்தியாவில் திருமதி இந்திரா காந்தியின் தலைமையிலுள்ள மத்திய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதே தமது முதல் வேலை என்று சொல்லிக்கொண்டிருக்கும் முன்னாள் உதவிப் பிரதமரும் நிதி மந்திரியுமான திரு. மொரார்ஜி தேசாயின் 'சிண்டிக்கேட்' காங்கிரஸும், ஜனசங், ராஜாஜியின் சுதந்திரக் கட்சி ஆகியவையும் ஐக்கிய முன்னணியொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இது எந்த அளவுக்குப் பயனளிக்குமென்பது இனித்தான் தெரியவரும்.

'சிண்டிகேட்' காங்கிரஸின் தலைவர்களில் ஒருவரான திரு. கு. மகாராஜர் சுதந்திராக்கட்சி ஸ்தாபகரான ராஜாஜியின் அரசியல் விரோதியாகக் கருதப்பட்டவர். தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஒழிவதற்கே ராஜாஜிதான் மூலகர்த்தா என்று காங்கிரஸ்காரர்கள் சிலர் வெளிப்படையாக கூறிவந்திருக்கின்றனர். இன்று ராஜாஜியின் சுதந்திராக்கட்சியும் காமராஜரின் 'சிண்டிக்கேட்' காங்கிரஸும் ஒன்றுசேர்ந்து இந்திராவின் 'இண்டிகேட்' காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்க்க முனைவதாயின் அதன் அர்த்தம் என்ன?

சென்ற தேர்தலில் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வருவதற்காக கூட்டணி அமைத்த பொழுது அதில் அங்கம் வகித்த கம்யூனிஸ்ட் மற்றும் சில கட்சிகளும் தி. மு. க. கூட்டணியிலிருந்து மெது மெதுவாக விலகிக் கொண்டு சுதந்திராவையும் வெளியேறும் படி கூறும் பொழுது அப்படி வெளியேறுவது நல்லதல்ல வென்று ராஜாஜி யோசனை கூறுகிறார்.

திரு. கருணாநிதியோ இந்திரா அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டிய அவசியமென்ன வென்றும் இந்திய நாட்டைக்காப்பாற்றுவதற்கு சிண்டிகேட் காங்கிரஸ், ஜனசங், சுதந்திரா ஆகிய மூன்று கட்சிக் கூட்டணியை விட இந்திராவின் இண்டிகேட் காங்கிரஸ் உட்பட சக கட்சிகளின் கூட்டணியும் ராஜாஜியின் தலைமையில் ஒன்று சேர்ந்து ஆட்சிக்கு வருவதுதான் பொருத்தம் என்றும் கூறியிருக்கிறார். மூன்று கட்சிக் கூட்டணியை ஆதரித்து இந்திரா அரசைக்கவிழ்க்க தி.மு.க. உதவி செய்யாதென்றும் தெளிவு படுத்தியிருக்கிறார்.

'மாநிலசுயாட்சி மத்தியில் கூட்டாட்சி' என்ற தங்கள் கொள்கை வலுப்பெற்று வருகிறதென்றும் திரு கருணாநிதி தெரிவித்திருக்கிறார் மூன்று கட்சிகளின் கூட்டணி இந்திராவைக் கவிழ்த்து புதிய ஆட்சி அமைக்க முன்வந்தால், கருணாநிதியின் 'மத்தியில்கூட்டாட்சி மாநில சுயாட்சி' என்ற கோஷம் செயல் படுவது கடினமல்ல.

'சாணக்கியன்' என்று பெயர் பெற்ற ராஜாஜியையும் கருணாநிதி மிஞ்சிவிட்டால் ஆச்சரியமில்லை என்று சொல்வது தவறாகுமா?

கோட்டை, வியாழன்

இலங்கை வங்கியின் சட்ட திட்டங்களில் மாற்றங்கள் கொண்டு வருவதற்காக இலங்கை வங்கியின் கட்டுக்கோப்பு திருத்தியமைக்கப் படவிருக்கிறது.

## மரண அறிவித்தல்

**அருணாசலம்—சிவகுரு**

உரும்பராய் கிழக்கு மலாயன் பென்சனர் திரு. அருணாசலம் சிவகுரு காலமாகிவிட்டார். இவர் திருமதி சிவக்கொழுந்துவின் கணவரும் திருமதி பஞ்சலிங்கம், திருமதி ராஜேந்திரம், சற்குணதேவி சிவபாதசுந்தரம், சிவலோகநாதன், சிவானந்தன், சாந்தாதேவி ஆகியோரின் தந்தையும், திருவாளர்கள் சீனிக்குட்டி, செல்லப்பா, சுப்பிரமணியம் (Proctor) காலஞ்சென்ற சுவாமிநாதன் ஆகியோரின் சகோதரரும், திருவாளர்கள் பஞ்சலிங்கம், இராஜேந்திரம் ஆகியோரின் மாமனருமாவார், ஈமக்கிரியைகள் இன்று நண்பகல் நடைபெறும். 2172

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கலாச்சார உதவி மந்திரி தமிழ் தாலாட்டு பாடினர்

யாழ்ப்பாணம், வெ ?

இராமநாதன் கல்லூரி மாணவிகள் முன்னிலையில் கலாச்சார உதவி அமைச்சர் திரு. சோமவீர சந்திரசிறீ தமிழில் தாலாட்டுப் பாடினார்.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் நேற்று நடந்த பொது வரவேற்பின்போதே உதவி அமைச்சர் தாலாட்டுப் பாடினார். இவ்வரவேற்பிற்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் தலைமை தாங்கினார்.

தமிழ், சிங்கள, கலை, கலாச்சாரத்தில் பல்லாண்டு காலமாக ஒருமைப்பாட்டை காணக்கூடியதாக இருக்கின்றதென்றும், நடனம், பாடல், நாடகங்கள் ஒன்றோடு ஒன்று ஒத்திருப்பதைக் காணலாமென்றும் உதவி அமைச்சர் பேசும் போது கூறினார்.

தமிழ், சிங்கள தாலாட்டுகளை பாடிக் காட்டிய உதவி அமைச்சர் அவற்றில் உள்ள ஒற்றுமையை விளக்கிக் கூறினார்.

உதவி அமைச்சர் மேலும் கூறியதாவது:

சேர். பொன். இராமநாதன் கட்டி எழுப்பிய தேசிய ஒற்றுமையை மக்கள் அரசாங்கம் மீண்டும் நிலைநிறுத்தியுள்ளது. அவர் அத்திபாரமிட்ட அதே கல்லூரியில் நாம் தமிழர், சிங்களவர் என்ற பேதமின்றி இணைந்து செயலாற்ற சங்கற்பம் எடுத்துக் கொள்வது பொருத்தமானது.

பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா தேசிய ஒற்றுமையை செயலில் காட்டினார். முந்திய அரசாங்க மந்திரிகள் பணக்காரர்கள் மத்தியில் வாழ்ந்தார்கள்; ஆனால் மக்கள் அரசாங்க மந்திரிகள், ஏழைகள் மத்தியில் நடமாடுகின்றார்கள்.

தமிழர் சிங்களவர் ஒற்றுமை ஏற்படவேண்டும் என்பதற்காகவே பிரதமர் முறைக்குமுறை மந்திரிகளை வடபகுதிக்கு அனுப்பி வருகின்றார்.

இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்த திரு கல்யாணசுந்தரேசன் பேசுகையில் கூறியதாவது:

மகாத்மா காந்தியுடன் நெருங்கிப் பழகிய இவர் சுதந்திர போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றிருக்கிறாரென்றும் உதவி மந்திரி வடபகுதியில் ஏழைகளின் வீடுகளில் தான் அதிகமாக செலவிடுகிறாரென்றும் தமிழ் மக்களின் சந்தேகத்தை நீக்க மக்கள் அரசாங்கம் வழி செய்ய வண்டுமென்றும் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

## "குடியிருப்பாளரை நிர்ப்பந்தம் செய்தால் தண்டனை"

கொழும்பு, வியாழன்

குடியிருப்பாளரை வெளியேற்ற அத்தியாவசிய சேவைகளான தண்ணீர், மின்சாரம் ஆகியவற்றை தடைசெய்து; வீட்டு ஓடுகளை அகற்றுவது போன்ற தொல்லைகளை, கொடுக்கும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப் படவேண்டும்.

வாடகை கட்டுப்பாட்டு பரிசீலனை கமிட்டி, வீடமைப்பு மந்திரி திரு. பீட்டர் கெனமனிடம் சமர்ப்பித்துள்ள சிபார்சுகளில் மேற்கூறப்பட்டிருப்பதும் ஒன்றாகும்.

ஆறு உறுப்பினர்களைக் கொண்ட வாடகை கட்டுப்பாட்டு பரிசீலனைகமிட்டியின் அறிக்கை வீடமைப்பு மந்திரியிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது

வாடகைக்கு கொடுக்கப் பட்டிருக்கும் வீட்டிற்கான திருத்தங்களை செய்யுமாறு, வீட்டுச் சொந்தக்காரரை கட்டாயப்படுத்துவதற்கு சபைக்கு மேலதிகஅதிகாரம் வழங்கப்படவேண்டும் என்றும் குழு கருத்து தெரிவித்துள்ளது. தற்பொழுதுசபை வீட்டிற்கான திருத்தங்களை செய்யும்படி, வீட்டுச்சொந்தக்காரர்களுக்கு உத்தரவிடலாமே தவிர அதைக் கட்டாயப்படுத்துவதற்கு சட்டம் இடம்கொடுக்கவில்லை.

வீட்டுவாடகை பணத்தை சேகரித்து, அதனை வீட்டுச் சொந்தக்காரர்களிடம் கொடுப்பதற்கு தனிப்பட்ட ஓர் இலாகா நிறுவப்பட வேண்டும் என்றும், குழு சிபார்சு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஒருவீடு வாடகைக்குவிடப் படுமுன் வீட்டுச்சொந்தக்காரர் சன்மானமாகப்பணம் பெறுவதை இது கட்டுப்படுத்தும் என்றும், வாடகை கட்டவில்லை என்ற காரணம் காட்டி குடியிருப்பாளர்களை வெளியேற்றும் முயற்சியையும் கட்டுப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வாடகைப்பணத்திற்கு, வீட்டுச்சொந்தக்காரர்கள், பற்றுச்சீட்டுக் கொடுக்காமல் விடுவதையும் இதுகண்காணிக்ககூடியதாக இருக்கும்.

இக்குழு அறிக்கையில் கீழ்க்கண்ட சிபார்சுகளையும் செய்துள்ளது. சகல வீடுகளுக்கும், வாடகை கட்டுப்பாட்டு சட்டத்தின்கீழ் கொண்டு வரப்படவேண்டும்.

## திருட்டுப்பசுவை சுட்டு பங்கு போட்டனராம்!

### வாலிபர் அகப்பட்டார்

மட்டுவில், வியாழன்

திருட்டுத்தனமாக பசுமாட்டைச் சுட்டு, இறைச்சியைப் பங்கீடுசெய்யும்போது கிராமசேவையாளர் சென்று கைது செய்யப்போன போது, வாலிபர் ஒருவரைத் தவிர ஏனையோர் ஓடித்தப்பித்துக் கொண்டனர். அகப்பட்ட வாலிபரை இம்மாதம் 28-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி சாவகச்சேரி மாஜிஸ்திரேட்கட்டளையிட்டுள்ளார்.

துணுக்காய் உயிலங்குளத்தைச் சேர்ந்த செல்வநாயகம் என்பவருக்குச் சொந்தமான ஒரு பசு மாட்டை துப்பாக்கியால் சுட்டு காட்டுக்குள் ஏற்றிச்சென்று பங்கீடு செய்தனராம் இதை அறிந்த கிராமசேவையாளர் திரு. சோமநாதர் ஸ்தலத்திற்கு விரைந்தபோது பாலசுப்பிரமணியம் என்ற வாலிபரைத் தவிர ஏனையோர் ஓடித் தப்பித்துக் கொண்டனர்

கிராமசேவையாளர் திரு. சோமநாதர் இறைச்சியையும் வாலிபர் பாலசுப்பிரமணியத்தையும் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கேவிக்னராஜா முன்னிலையில் ஆஜர்செய்தார். மாஜிஸ்திரேட், இறைச்சியை அப்புறப்படுத்தும்படியும், சந்தேக நபர் பாலசுப்பிரமணியத்தை இம்மாதம் 28-ம் திகதி வரை றிமாண்டில்வைக்கும்படியும் உத்தரவிட்டார். ......

வாறு சொன்னர்; திரு நவதர்மராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு வ நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்றிருக்கும் நிலையில் சட்டங்கள் பேசிப்பிரயோசனமில்லை. அரசமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தங்களை நம்புமாறு கேட்கிறார். இந்த கோரிக்கை புதிதானதல்ல. சோல்பரித் திட்டவிவாதத்தின் போதும் இந்தமாதிரித்தான் தங்களை நம்ப வேண்டுமென்று ஒவ்வொரு சிங்களத் தலைவர்களும் கோரினார்கள். காலஞ்சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா, தான் எந்தவிதமான துரோகமும் செய்ய மாட்டேன் என்று கூறி தம்மை நம்ப வேண்டுமென்றார். அவர்களை நம்பித்தான் அந்தக் காலத்துத் தலைவர்கள் ஒத்துழைத்தனர். அவர்களைப்போலவே இன்றுள்ள தலைவர்களும் ஒத்துழைப்புக்கொடுக்கவேண்டுமென்றும் கூறுகிறார்கள்.

தமிழர் தம்மை நம்ப வேண்டுமெனக் கேட்ட சிங்களத்தலைவர்கள் கடந்த இருபத்திரண்டு வருடகால

## மக்கள்கமிட்டி ...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

■ எந்த அதிகாரிகளையும் அரசாங்க உத்தியோகத்தர்களையும் மக்கள் கமிட்டி உறுப்பினர்கள் சந்தித்துப் பேசலாம்.

■ ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள படித்த வாலிபர்கள் மூவர் இக்கமிட்டிகளின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

■ மக்கள் கமிட்டி உறுப்பினர்களுக்கு கடிதத் தொடர்பு, பிரயாண வசதிகள் கொடுக்கப்படும்.

வைச்சபை மூலம் பல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விதைவெங்காயம் வழங்கப்பட்டது, வெங்காயம் பெருத்து தக்கபலன் தராதது பற்றியும், வெங்காயம் உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் பற்றியும் ஆராய்ந்து நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்

## யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி

கஸ்தூரியார் வீதியில் நா. தேவராசா என்பவர் கைமணிக்கூடு ஒன்றைக் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக் கொள்ளலாம்

## இறைவனடிப் பேறுபெற்ற

# மறைத்திரு. கலாநிதி டி. ரீ. நைல்ஸ் அவர்கள்

ஈழத்தின் மெதடிஸ்த சங்க மென்ற
இணையில் குருத்துவ சங்கத் திறமை பெற்று
ஆழத்தின் அன்புடையோன் அருளோன் ஆவி
ஆன திரித்துவ சேவைக் கடிமை பூண்டு
ொழத்தன் வாழ்வளித்த வண்மையாளன்
வரைமொழியின் பிரசங்கன் வானதூதர்
சூழத்தன் உலகபணி துறந்து சென்று
தூயபரி சுத்தர் குழுத் தொடர்புற்றானே.

அலைப்பட்ட உலகப்பே ராழி மீது
ஆழ்கயவாழ் விடைப்பட்டு அமிழுவோர்க்கு
நிலைப்பட்ட நித்தியவாழ் வளிக்கும் யேசு
நிமலவருட் டுணைப்புணையின் நெறியைக் காட்டும்
மலைப்பட்ட வாசகத்தை மக்கட் கெல்லாம்
மருந்தாக விருந்தாக மகிழ்ந் தளித்த
கலைப்பட்ட தாரிகலா நிதியாம் ஞானக்
கருவூலக் குரவனிறை கதியுற்றானே.

அற்பிரசங் கலந்தமொழி அண்ணல் யேசின்
அடியார்க்குள் அடியவனாய் அவனிக் கெல்லாம்
சொற்பிரசங் கத்தினிலே யுள்ளங் கொளளச்
சுருதிமொழித் தத்துவத்தைச் சுவைகொழிக்க
நற்பிரச கலந்தளிக்கும் நைல்ஸ்சைப் போன்ற
நற்குருவார் சற்குருவை நயந்து காட்ட
முற்பிரசா வதிபதியாய்க் கிறிஸ்தோர் சங்க
முழுத்துலகின் தலைமைபெறு முதன்மையோனே.

மேற்றிசையில் கீழ்த்திசையில் மேவியுள்ள
மேதக்க கிறிஸ்தவ நற் சபைகளெல்லாம்
நாற்றிசையும் புகழ் மணக்க ஒருத்துவத்தை
நாட்டுமொரே நிறுவனத்தை ஆக்கிவைக்கும்
பேற்றிசையைப் பெறவுழைத்த பெருமையாளன்
பிரசங்கப் பெருங்கொண்டல் பிறங்கலுற்ற
ஊற்றிசைய ஊருணிநீ ராகவுற்றோன்
உயர்வொப்பில் லோனொழிந்தான் உலகவாழ்வே.

போதகத்தார் போதகனே புகலும் மார்க்கப்
பொருளறியாப் புல்லரெலாம் புறமிட்டோடும்
வாதகத்தார் வாதகனே வாழ்வில் நீதி
வண்மை சமத்துவமாதி வயங்கி யோங்கும்
சாதகத்தார் சாதகனே சபையோ ரெல்லாம்
தலைவணங்கச் சதுரமொழி சாற்றுவோனே
தீதகத்தார் தீதகற்றச் செந்நீர் சிந்திச்
சிலுவைமிசை மாண்டோன்றாள் சேர்ந்துள்ளானே.

— கற்கை சரவணனூர்

அடிக்குறிப்பு:
1-ம் செய்யுள். 1 பிதா, 2. குமாரன் 3. பரிசுத்தாவி
2-ம் ... 1. கப்பல், 2. தெப்பம், 3. பொக்கிஷம்
3-ம் ... 1. அன்புரசம், 2. நல்லதேன் (பிரசம்-தேன்)
4-ம் ... 1. மேகம், 2 மலை
5-ம் ... 1. தாள் — பாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org